Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 14 புதன்கிழமை (30-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:208

# தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் பிரிக்கப்படாதவகையில் சுயாட்சி!

## இடதுசாரி முன்னணியின் கொள்கை குறித்து முதன்மை வேட்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்30

**தமிழர்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையில் பிரிக்கப்படாத வகையில் சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும்.**

**ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளரும் புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலாளருமான சி.கா. செந்திவேல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்டடமொன்றில் நேற்று பிற்பகல் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பிரமுகர்களான க.தேவதாசன், க.தணிகாசலம், சோ.தேவராசா, கா. கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

செந்திவேல் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களுக்கு சுயாட்சி உரி

(11 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர் சேவையில் இனி புதிய கப்பல்!

### இன்றைய் சேவை ரத்து

யாழ்ப்பாணம்,ஓக.30

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று புதன்கிழமை நடைபெறமாட்டாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

நோயாளர் சேவையில் புதிய கப்பல் ஒன்று ஈடுபடவுள்ளது. அதனையடுத்தே இன்றைய சேவை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் பெரும்பாலும் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை இக்கப்பல் சேவை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளர் சேவையில் ஈடுபடவுள்ள புதிய கப்பலின் பெயர் 'ஜயா கோல்ட்' (JEYA GOLD) என்பதாகும். சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான இந்தக் கப்பலில் கூடுதலான நோயாளிகளை ஏற்றிச் செல்ல இடவசதி உண்டு.

தற்போது சேவையில் ஈடுபட்டு வரும் 'ஜவா கல்ப்' கப்பலில் உள்ள தொடர்பு சாதனங்கள் மற்றும் கருவிகளை இப்புதிய கப்பலில் பொருத்தும் பணி தற்சமயம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளரும் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளருமான சி.கா. செந்திவேல் (மத்தி)நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படம் இது. அவரது வலது பக்கத்தில் க.தேவதாசன், க.தணிகாசலம் ஆகியோரும் இடது பக்கத்தில் கோ.தேவராசா, கா.கதிர்காமநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்:-பொ.இராஜேஸ்வரன்)*

## மோதல் சம்பவங்கள்

கொழும்பு,ஓக.30

யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் பல இடங்களில் அரசுப் படைகளுக்கும்,விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அன்று காலை சரசாலைப் பகு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவராக டக்ளஸ் மீண்டும் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்.மாவட்டத்தில் அவசர அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த வசதியாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான 'பக்ஸ்' செய்தி யாழ்.அரச அதிபருக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் பதவியை டக்ளஸ் தேவானந்தா இழந்ததையடுத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை இருந்ததாகவும் -

இதைத் தொடர்ந்து அவரை மீண்டும் அந்தப்பதவியில் ஜனாதிபதி நியமித்துள்ளதாகவும - தெரிவிக்கப்பட்டது.

புதிய நாடாளுமன்றம் கூடும் வரை இவர் இந்தப் பதவியை வகிப்பார் என்று கூறப்பட்டது. (இ-3)

## பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவா? இல்லையா?

# தனது நிலைப்பாடு குறித்து முடிவு செய்ய முஸ்லிம் காங்கிரஸுக்கு காலக்கெடு!

கொழும்பு,ஓக.30

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை - அதாவது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்தா அல்லது தனித்தா போட்டியிடுவது என்பதை - இன்று மாலைக்குள் தெரியப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்தினா காலக்கெடு விடுத்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது வேட்பாளர் பட்டியலைப் பூர்த்தி செய்வதற்காக இந்தக் காலக்கெடுவை விதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் - தற்போதுள்ள நிலைமை குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் உயர்பீடம் நேற்று மாலை கூட இருந்தது. எனினும் அந்தக்கூட்டம் திடீரென ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (இ-க-3)

## ஹெலி பூமாரி

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் கந்தசுவாமி கோயில் தீர்த்தக்கேணியில் நேற்றுக் காலை முருகப்பெருமான் தீர்த்தமாடிய சமயம் விமானப்படையினரின் 50 கலிபர் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலி ஒன்று தாழப்பறந்து பூமாரி பொழிந்தது.

நேற்றைய உற்சவத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கு கொண்டனர். (இ-3-30-31-111)

## நேற்று நாடு திரும்பிய கையோடு வாகனங்களை கையளித்த அஷ்ரப் மெய்ப்பாதுகாவலரையும் திருப்பி அனுப்பினார்!

கொழும்பு,ஓக.30

மக்காவில் இருந்து நேற்றுக் காலை இலங்கை திரும்பிய கையோடு தனது குண்டுதுளைக்காத கார் மற்றும் அரச வாகனங்களை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் அரசிடம் ஒப்படைத்தார்.

அத்துடன் தமக்கு வழங்கப்பட்டிருந்த மெய்ப்பாதுகாவலர்களையும் பொலீஸ் நிலையங்களுக்குச் செல்லுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அதேசமயம் தாம் பதவி விலகுவதற்கான காரணங்களைத் தெரிவித்து 36 பக்கங்களைக் கொண்ட கடிதம் ஒன்றை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

ஆனால் இந்தக் கடிதத்தை ஜனாதிபதி இன்னமும் ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை தம்மைச் சந்திக்கும்படி ஜனாதிபதி அமைச்சர் அஷ்ரப்புக்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(இ-க-3)

## புளொட் உறுப்பினர் அறுவர் ஆயுதங்களுடன் தப்பினர்!

### மன்னாரில் சம்பவம்

வவுனியா,ஓக.30

மன்னார் நகரப்பகுதியில் அமைந்துள்ள புளொட் அமைப்பின் முகாமில் இருந்து ஆறு உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் தப்பிவிட்டனர் என்று கூறப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இந்த முகாமில் இருந்து 7 பேர் தப்பி ஓடினர் என்றும் -

பின்னர் படையினரும் அந்த அமைப்பினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தப்பி ஓடிய அறுவரும் விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்து இருக்கலாம் எனக் கருதப்பட்டதாகவும் -

ஆனால் அதை நேற்றிரவு வரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை என்றும் - மன்னார் செய்திகள் தெரிவித்தன. (இ-3-7)

## சண்டே லீடருக்கு எச்சரிக்கைக் கடிதம்

கொழும்பு,ஓக.30

பாதுகாப்புப் படையினரின் மனோதிடத்தைப் பாதிக்கும் விதத்தில் இராணுவ உயர் அதிகாரிகள் குறித்த செய்திகளை வெளியிட்டதாக 'சண்டேலீடர்' பத்திரிகைக்கு செய்தித்தணிக்கைக்கான தகுதி வாய்ந்த அதிகாரியான ஆரியரூபசிங்க எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஆரியரூபசிங்க தெரிவிக்கையில் படையினருக்கும் - புலிகளுக்கும் போர் நடைபெற்றுவரும் இந்தவேளையில், சில பத்திரிகைகள் இந்த மாதிரி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது வருந்தத்தக்கது.

"தளபதி ஜானகபெரேரா தன்னை இராணுவத் தளபதியாக நியமிக்காததால் அதிருப்தியடைந்துள்ளார். இதனால் அவர் முன்னதாக பதவி ஓய்வடையப் போகிறார்." என்றெல்லாம் வெளியான செய்திகள் இலங்கையின் அவசர கால சட்ட விதிகளை மீறுவதாக உள்ளன.

இச் செய்திகள் படை வீரரின் மத்தியில் பிளவை ஏற்படுத்தி விடும் - என்றார். (இ-8)

# உயிலங்குளத்துக்கு அருகில் மினி முகாம் மீது தாக்குதல்!

## 21படையினர் காயமடைந்தனர்

கொழும்பு,ஓக.30

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து ஆறுமைல் தூரத்தில் மன்னார் - மதவாச்சி வீதியில் உயிலங்குளத்துக்கு அருகில் கள்ளியங் கட்டைக்காடு என்னும் இடத்தில் அமைந்துள்ள மினிமுகாம் மீது நேற்று அதிகாலை 3 மணிமுதல் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் நேற்று இரவு அறிவித்தது.

அந்தப்பகுதிக்கு மேலதிக துருப்புக்கள் அனுப்பப்பட்டு பதில் தாக்குதல் நடத்தப்பட்டு புலிகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் -

இந்தச்சண்டையில் 21 படையினர் காயமடைந்தனர் என்றும் - ஊடகத்தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

சுமார் 75 விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் -

மேலதிக துருப்புக்கள் அனுப்பப்பட்டு நேற்றுக்காலை அங்கு இடம்பெற்ற சண்டையை அடுத்து புலிகள் பின்வாங்கி விட்டனர் என்றும் - அது மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

படையினர் அங்கு நடத்திய தேடுதலில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் சடலம், நாணாவித இராணுவ தளபாடங்கள், மூன்று கிளைமோர்கள், ஆறு கைக்குண்டுகள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் -

தேடுதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என்றும் - தெரிவிக்கப்படடது. (இ-3-7-8)

# மணமங்கல வாழ்த்து

*மணமகன்* : **திருவளர் செல்வன் திருநாவுக்கரசு ஜீவன்**
(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

*மணமகள்* : **திருநிறை செல்வி சிவசுப்பிரமணியம் சிவதர்சினி**
(முதலி கோயில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு)

அறிவு, அழகு, அன்பு, அடக்கம், நாண், பொறுமை
என ஆன்றோர் வகுத்துச் சொன்ன
நிறை குணத்து தர்சினியை ஜீவன் மணம்
புரிகின்ற செய்தியால் நெஞ்(சு)
உறுமுவகைக் கெல்லையுண்டோ மணமக்கள்
உலகிலுள இன்பம் யாவும்
பெறுக! உடல் இரண்டெனினும் உயிரொன்றாய்க்
கலந்து நீடூழி வாழ்க!

சுற்றமும் கிளையும் தாங்கி நம் முன்னோர்
சொன்னபல் லறங்களும் ஓம்பீ
நற்றவமாக இல்லறம் நடத்தும்
நம்பியும் நங்கையும் என்ற
சொற்றுணையாக வாழ்க்கையாம் ஓடம்
தூண்டுக கருத் தொரு மித்து!
மற்று நன்மக்கட் பேறெல்லாம் எய்தி
வாழிய நீவீர் பல்லாண்டு!

எமது சபையின் மாவட்டச் செயலாளர் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்களின் ஏகபுத்திரி செல்வி.சி.சிவதர்சினியின் (லண்டனில் இன்று நடைபெறும்) திருமணத்தையொட்டி மணமக்களை மனமார வாழ்த்துகின்றோம்.

*வீரசிங்கம் மண்டபம்,*
*இல.12, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*30.08.2000* (77808)

**தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்,**
**யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.**

---

உ
*சிவமயம்*

## வடபிராந்திய இந்துப் பேரவை

**நல்லைக் கந்தன் உற்சவ கால**
**சைவப் பெரியார்களை**

## கௌரவிக்கும் நிகழ்ச்சி

தலைமை: **கலாபூஷணம், சங்கீதபூஷணம்**
**வே.சந்திரசேகரம் அவர்கள்**

காலம் : **இன்று 30.08.2000 (பூங்காவனத் திருவிழா)**
**பிற்பகல் 1.00 மணி**

இடம்: **அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடம் (தேரடி)**

※ திருமுறை பாராயணம் கோளறு பதிகம்
இடர் களை பதிகம் ஓதுதல்

※ ஆசியுரை - பிரம்மஸ்ரீ ச.சிவகடாட்சக் குருக்கள்
*(பிரதமகுரு, நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்)*

※ வாழ்த்துரைகள்:
சிவத்திரு பொ.பாலசிங்கம *(யாழ்.மாநகர ஆணையாளர்)*
கலாநிதி க.தணிகாசலம்பிள்ளை *(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்)*
மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சபை - உயர் அதிகாரிகளும.

※ உற்சவ கால நிகழ்ச்சியில் பங்கேற்ற
***சைவப் பெரியார்கள் கௌரவிப்பு நிகழ்வு***

※ வில்லிசை - வள்ளி திருமணம்
சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்

| தர்மதீபம் | அருள்நெறித் தொண்டர் | சிவத்திரு |
|---|---|---|
| *ப.சிவலோகநாதன்* | *சிவ. ஆறுமுகசாமி J.P* | *ந. நவரத்தினம்* |
| செயலாளர் | அமைப்பாளர் | நிர்.செயலாளர் |

*விளம்பர அன்பளிப்பு:* ***சீமாட்டி***
122,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/12748)

---

## நாவலர்
**கல்வி நிலையம்**

**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**A/L 2001 2002**

**கணித வகுப்பு**
ஆரம்பம்:
**01.09.2000**
**வெள்ளி 3.00 மணி**

★ **இணைந்த கணிதம்**
திரு.P.ஜெயக்குமார்
A/L 2001 **நிகழ்தகவும் புள்ளிவிவரவியலும்**
A/L 2002 - **வகையீடு**

★ **இரசாயனவியல்**
திரு.அன்பு
**சேதன இரசாயனம்**

★ **பௌதிகவியல்**
திரு.கருணாநிதி
*மின்னியல்*
(77825)

---

## SUBRA 14
**சித்தன்கேணி**

**General English**
for A/L Students
**by :Mr. Vijayabaskar**
Thu., Sun.- 4.00 pm
(New Batch)
07.09.2000
(77792)

---

## ராஜா கல்வி நிலையம்
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

**G.C.E - O/L 2000 ஆண்டு**
*மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை*
**(02-09-2000)** சனிக்கிழமை முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் கணிதபாடப் பரீட்சை அலகுரீதியாக நடத்தப்படும்.

**ஆசிரியர்- திரு.செ.தவராசா**
கட்டணம்:-ரூபா 3
★ சகல மாணவர்களும் பங்குபற்றலாம்.
பாடசாலைகள், கல்வி நிலையங்கள்
வினாத்தாள்கள் தேவையென்றால் பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விவரங்களுக்கு
மேற்படி கல்வி நிலைய நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்.
(77816) - *நிர்வாகி*

---

## விற்பனைக்கு

கட்டில்கள், கதிரைகள், மேசைகள், மற்றும் சமையலறைக்குத் தேவையான அம்மி, ஆட்டுக்கல், கல்உரல், உலக்கை என்பனவும் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறி மற்றும் அனைத்து வீட்டுப்பாவனைப் பொருள்களும் உடன் மலிவு விற்பனைக்கு உண்டு

*தொடர்பு:* **87, பிறவுண் வீதி,**
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் அருகில்)
**யாழ்ப்பாணம்.**
(77817)

---

## நாகம்ஸ்
**சுன்னாகம்**

**அஜித் - ஷாலினி**
நடிப்பில்

## அமர்க்களம்
**(ரீல்ஸ்)**
**காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)**
(77810)

---

## ராஜா
(யாழ்ப்பாணம்)

கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்

## பூவேலி
**காட்சிகள்: 10.30, 2.00**
**(புதிய நேரம்)**
(C/12325)

---

## திருத்தம்

**பின் முற்றாகும் தீர்வை:-**

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
துரைராசா பெண காந்திமதி
இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.
வழக்காளி:

எதிராக
வரதராசா துரைராசா
பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.

எனும் தலைப்பில் 17-08-2000 அன்று பிரசுரமான உதயன் பத்திரிகையில் பக்கம் 02இல் வெளிவந்த விளம்பரத்தில் **வழக்கு இல. ம.ந.95** தவறுதலாக விடப்பட்டுள்ளது. அதனையும் சேர்த்துக் கொள்ளவும். (77365)

---

## நீங்கா நினைவில் பத்தாம் ஆண்டு

மலர்வு
04 — 10 — 1922



உதிர்வு
30 — 08 — 1990

**திருமதி**
## அன்னம்மா அந்தோனிப்பிள்ளை
(சிங்கம்)

*"ஆண்டவருடைய இரக்கத்தில்*
*உமது ஆன்மா மகிழ்ச்சியடையக்கடவது*
*அவருடைய புகழ்ச்சியில்*
*கலக்கம் அடைய மாட்டீர்"*
சீராக் ஆகமம் 51:37

**பத்து வருடங்கள் பறந்தோடிப் போனாலும்**
**பண்பு மிகு தாயே! பத்து மாதம் சுமந்த**
**உன் பாசமுகம் மறப்போமோ - நாம்**
**புத்தி தடுமாறிப் புலம்பித் தவிக்கின்றோம்**
**நித்தமும் உன் நினைவால் நெஞ்சுருகி வாடி நின்று**
**நின் ஆத்ம சாந்திக்காய் நிமலனையே வேண்டுகின்றோம்!**

அன்னாரின் ஆன்ம அமைதிக்காக இன்று (30-08-2000) புதன் கிழமை காலை 6.45 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்,
**அன்புக் கணவர்,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

*42/5, மவுண்கார்மல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(77660)

---

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா தம்பிராசா (ஆசிரியர்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தம்பிராசா அவர்கள் 28.08.2000 திங்கட்கிழமை திருச்சியில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், குகதாஸன், முருகதாஸன், கௌரி, குமாரதாஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தம்பித்துரையின் (சிங்கப்பூர் பென்சனியர், கோண்டாவில் மேற்கு) சகோதரனும் திரு. திருமதி செல்லத்துரை (ஆசிரியர், சங்குவேலி) தம்பதிகள், வேதவனம் தம்பதிகள் (கோப்பாய் வடக்கு) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.08.2000) செவ்வாய்க் கிழமை திருச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*75, மாளிகாகந்த வீதி,*
*மருதானை,*
*கொழும்பு 10.*
*T.P.NO. 672595.*

தகவல்:
குமாரதாஸன்
(மகன்)
(77828)

### அருணாசலம் திருநாவுக்கரசு
(முன்னாள் இ.போ.ச சாரதி)

மாப்பான வீதி, காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட அருணாசலம் திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (29.08.2000) காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்போதைய முகவரி:*
*'ஆனந்தபவான்',*
*மார்க்கற் ஒழுங்கை,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
திருமதி
மகேஸ்வரி திருநாவுக்கரசு
(மனைவி)
(C/12752)

சுப்பிரமணிய சுவாமியின் ஆசை இது:-

# வீரப்பன் யாழ்ப்பாணத்துக்கு சென்று அங்கு தமிழருக்கு உதவ வேண்டும்!



சுப்பிரமணிய சுவாமி

சென்னை,ஓக.30

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்குள்ள தமிழர்களுக்கு உதவவேண்டும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

இந்தியத் தமிழர்களின் நலனைக் காக்க அரசமைப்புச்சட்டமே போதுமானது. அதற்கு வீரப்பன் தேவையில்லை. தமிழர்களின் நலனே வீரப்பனின் குறிக்கோளாக இருக்குமானால் யாழ்ப்பாணத் தமிழர்களின் உதவிக்கு செல்ல வேண்டும். அங்குதான் இலங்கை இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்தும் போர் தொடர்ந்தால் அடியோடு இலங்கைத் தமிழர்கள் அழிந்துவிடும் நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு சுப்பிரமணியம் சுவாமி அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழர்களுக்கு நியாயமும் பாதுகாப்பும் கிடைப்பதற்காகவே நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரைக் கடத்தியுள்ளதாக சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கூறியிருந்தது நினைவிருக்கலாம். (ஒ)

வீரப்பனின் நிபந்தனைகள் குறித்த

# அரசு உத்தரவுகளின் நகல்களுடன் கோபால் காட்டுக்குச் சென்றார்!

·சென்னை,ஓகஸ்ட்30

**சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் நிபந்தனைகள் தொடர்பான அரசு ஆணைகளின் நகல்களுடன் மூன்றாவது சுற்றுப் பேச்சு நடத்த 'நக்கீரன்' கோபால் நேற்று முன்தினம் இரவு காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.**



'நக்கீரன்' கோபால்

வீரப்பனுக்கு உதவி செய்தவர்கள் என்று கருதப்படும் 121 தமிழர்கள் மீதான வழக்குகளை விலக்கிக் கொள்ள கர்நாடக அரசு பிறப்பித்த உத்தரவு, 1992-93ஆம் ஆண்டுப் பகுதியில் வீரப்பனைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக இரு மாநில அரசுகளும் 10கோடி ரூபா நிதியம் அமைத்துள்ளதற்கான ஆவணம் ஆகியவற்றின் நகல்களை கோபால் தன்னுடன் எடுத்துச் செல்கிறார்.

கடந்த முறை காட்டுக்குச் சென்றபோது நஷ்டஈடு மற்றும் தமிழர்கள் விடுதலை ஆகிய நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதில் வீரப்பன் சந்தேகம் கொண்டிருந்ததாகவும் -

அரசு ஆணைகளின் நகல்கள் வீரப்பனின் சந்தேகத்தைப் போக்கி பணயம் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கஉதவும் என்று கருதுவதாகவும் புறப்பட்டுச் செல்லும் முன்னர் கோபால் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

கர்நாடகச் சிறையில் உள்ள தமிழர்களை விடுவிக்கும் அரசு ஆணையை ரத்துச் செய்ய வேண்டும் என்று வீரப்பனால் கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரி ஒருவரின் தந்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களை விடுவிக்கநேற்று வரை வீரப்பன் காலக்கெடு விதித்திருந்த போதும் மேற்படி வழக்கினால் விடுதலை தாமதமாகியுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி கன்னட நடிகர் ராஜ்குமார்உட்பட 4 பேரைக் கடத்திச் சென்ற வீரப்பன் அவர்களை விடுவிக்க 14 நிபந்தனைகளை விதித்துள்ளார்.

# பேராசிரியரைக் கொன்ற மாணவன் தற்கொலை!

## பரீட்சைத் தோல்வி காரணமாம்

அமெரிக்காவின் தென்மத்திய பிராந்தியத்தில் உள்ள 'ஆக்கான்சாஸ்' பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியரை அவரது மாணவர் ஒருவர் சுட்டுக் கொன்று விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பரீட்சையில் தோல்வியடையச் செய்ததாலேயே பேராசிரியர் கொல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது.

67 வயதான ஜோ.லொக்கி என்ற அந்த ஆங்கிலப் பேராசிரியர் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் மற்றும் பிறமொழிகள் துறைக் கட்டடத்தில் அமர்ந்திருந்தபோது அங்கு வந்த மாணவர் ஒருவர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து பேராசிரியரைச் சுட்டுக் கொன்றதாகவும்,பின்னர் தனது தலையில் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

தனிப்பட்ட விரோதத்தால் அந்த மாணவனைப் பரீட்சையில் தொடர்ந்து பலமுறை, கொல்லப்பட்ட பேராசிரியர் தோல்வியடையச் செய்ததாலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது என்று மாணவர்கள் கூறியதாக உறுதிப்படுத்தப்படாத தகவல் தெரிவித்தது. (ஓ)



**புத்தாயிரமாண்டில் உலக சமாதான உச்சி மாநாடு நேற்று நியூயோர்க்கில் தொடங்கியது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு போன்ற பல பிரச்சினைகள் குறித்து விவாதிக்க உலகெங்கும் இருந்து சுமார் 1500 மத மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் மாநாட்டில் கூடியுள்ளனர். தத்தமது பகுதி மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இவர்கள் மூலம் மத, இனப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று கருதப்படுகிறது. மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பங்குபற்றிய மதத் தலைவர்கள் சிலர் பிரார்த்தனையில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (ஓ)**

# குற்றவாளிகளை நாடு கடத்த பாகிஸ்தானிடம் கோரிக்கை

## பங்களாதேஷ் விடுத்தது

டாக்கா,ஓக.30

பங்களாதேஷின் தேசியத் தலைவரும், பிரதமர் ஹசீனாவின் தந்தையுமான அமரர் முஜிபுர் ரஹ்மானைக் கொலை செய்தவர்கள் தற்போது பாகிஸ்தானில் மறைந்து வாழ்வதாகத் தெரிவத்த பங்களாதேஷ் அரசு அவர்களை ஒப்படைக்குமாறு பாகிஸ்தானைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை பங்களாதேஷின் வெளியுறவு அமைச்சர் ஷகீல் ஹமீத், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பிடம் கையளித்துள்ளார்.

பல வருடங்களின் முன்னர் இராணுவப் புரட்சியின்போது அப்போதைய பிரதமராக இருந்த முஜிபுர் ரஹ்மானையும், அவர் குடும்பத்தினர் சிலரையும் அவரது வீட்டுக்குள் நுழைந்து படுகொலை செய்தது தொடர்பாகத் தேடப்பட்டு வரும் இராணுவ அதிகாரிகளே இப்போது பாகிஸ்தானில் உள்ளதாக பங்களாதேஷ் கூறியுள்ளது.

இவர்கள் அமெரிக்காவில் வாழ்வதாகவும், அவர்களை நாடு கடத்தும்படியும் பங்களாதேஷ் முன்பு அமெரிக்காவிடம் கோரிவந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-8)

இஸ்ரேலுடனான பேச்சுக்களில்

# சுமுகமான வழிமுறைகளுக்கு தயார்; உரிமைகளை விட்டுத்தர முடியாது!

## யசீர் அரபாத் உறுதி!!

காசா,ஓக.30

இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளில் சுமுகமான வழிமுறைகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் -

ஆனால் எந்தக் காரணத்துக்காகவும் பலஸ்தீனர்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்கமுடியாதென்றும் -

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மொராக்கோவில் நடைபெற்ற அரசுவிழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மேற்காசியப் பகுதிகளில் அமைதி ஏற்படுவதற்கு தீர்க்கப் படவேண்டியுள்ள ஜெருசலேம் பிரச்சினையில் பலஸ்தீனியர்கள் எதையும்விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்று கூறிய அரபாத், புனித நகரின் தலைவிதியை நிர்ணயிக்க உலக சமுதாயம் ஆதரவளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேசமயம் மொராக்கோவில் பலஸ்தீனப் பிரச்சினை குறித்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்திய 14 இஸ்லாமிய நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய சம்மேளனம், "ஜெருசலேம் தொடர்பான பலஸ்தீனியரின் இறைமையைக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் எதிர்ப்பதாகவும் -



யசீர் அரபாத்

உத்தேச பலஸ்தீன தனிநாட்டை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்றும் பிரகடனம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் ஆபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள அமெரிக்க அதிபர்பில் கிளினரன் அடுத்து எகிப்து உட்பட அரபு நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார். (ஓ-8)

# 59 ஆண்டுகளின் பின் சந்தித்த போலந்து நாட்டுச் சகோதரர்கள்!

## உலக யுத்தத்தில் பிரிந்தவர்கள்

ஜெருசலேம்,ஓக.30

சுமார் 59 ஆண்டுகளின் முன்னர் 2வது உலக மகாயுத்தத்தின் போது பிரிந்த இரு சகோதரர்கள் மீண்டும் இப்போது சந்தித்துள்ளனர். இந்தச் சந்திப்பு மிகப் பெரிய தங்கச் சுரங்கத்தைக் கண்டு பிடித்தது போன்ற சந்தோஷத்தைத் தந்துள்ளதாக இரு சகோதரர்களும் தெரிவித்தனர்.

1941ஆம் ஆண்டு போலந்தை ஜேர்மன் ஆக்கிரமித்தபோது லியோனிஸ்ட் சீமன், லாசர் என்ற இவர்கள் பிரிந்தனர். அப்போது சீமெனுக்கு 20 வயதும், லாசருக்கு 19வயதும் ஆகியிருந்தது.

பிரிந்த இருவரும் பல ஆண்டுகளாக ஒருவரை ஒருவர் தேடி அலைந்தும் கண்டுபிடிக்க முடியாததால் போரில் இறந்திருக்கலாம் என்று பரஸ்பரம் கருதினார்கள்.

இதன் பின்னர் 1957ஆம் ஆண்டு லாசர் இஸ்ரேலில் குடியேறினார். அங்கு இயற்கை சீரழிவு நினைவு அமைப்புக்குச் சென்று சீமன் காணாமல் போனது குறித்து தகவல் தெரிவித்து வைத்தார்.

இதே சமயம் உக்ரைனில் குடியேறியிருந்த சீமன், தற்செயலாக இஸ்ரேலுக்குச் சென்றபோது, இயற்கைச் சீரழிவு நினைவு அமைப்புக்குச் சென்று தன்னைப் பற்றியும், லாசர் காணாமல் போனது குறித்தும் தகவல் தந்தார்.

சமீபத்தில் அந்த அமைப்பினர், காணாமல் போனவர்கள் பற்றிய விவரங்களை ஆராய்ந்தபோது சீமன் மற்றும் லாசர் ஒருவரை ஒருவர் தேடிவருவதை அறிந்து, அவர்களுக்குத் தகவல் அனுப்பி அழைத்து ஒன்று சேர்த்துவைத்தது. (ஒ)

# இந்தியாவில் தொலைபேசிக் கட்டண குறைப்பு

இந்தியாவில் வெளிநாடு மற்றும் உள்நாட்டுத் தொலைபேசிக் கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தியா - இலங்கை இடையேயான தொலைபேசிக் கட்டணம் நிமிடத்துக்கு 3ரூபா 20 பைசா வரை குறைக்கப்பட்டுள்ளதாகவும், ஒக்டோபர் முதலாம் திகதி முதல் புது கட்டணம் அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் கட்சிப் போராட்டத்தில் பொலீஸ் சுட்டு இருபொலீஸார் பலி!

ஹைதராபாத்,ஓக.30

இந்தியாவின் ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தில் அரசியல் போராட்டம் வன்முறையாக மாறியதால், அதனை அடக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் இரு பொலீஸார் உட்பட மூவர் உயிரிழந்தனர். 143பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மாநில அரசு மின் கட்டணத்தை உயர்த்தியதை எதிர்த்து காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய போராட்டத்திலேயே வன்முறை வெடித்தது.

போராட்டக்காரர்கள் சட்டசபைக் கட்டடத்துக்குள் நுழைய முயன்றபோது, அவர்களைக் கட்டுப்படுத்த பொலீஸார், தண்ணீரை விசிறியடித்து, தடியடி நடத்தினர்.

இதனை அடுத்து போராட்டக்காரர்கள் பொலீஸாரைத் தாக்கத் தொடங்கியதாகவும் -

அதனாலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதாகவும் பொலீஸ் தரப்பில தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கும்பலைக் கலைப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு பொலீஸ்காரர்கள் தவறுதலாகச் சுடப்பட்டு இறந்ததாகவும், கட்சித் தொண்டர் ஒருவரும் பலியாகியுள்ளதாகவும், கூறப்படுகிறது.

ஆனால் இதனை மறுத்துள்ள பொலீஸார் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மட்டுமே பலியானதாகத் தெரிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் மீது பொலீஸார் தாக்குதல் நடத்தியதை கண்டித்து நேற்று ஆந்திராவில் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆந்திராவில் நூற்றுக்கணக்கான மக்கள் கடும் வெள்ளத்தால் பலியாகி உள்ள இந்தச்சமயத்தில் எதிர்க்கட்சிகள் தேவையற்ற போராட்டத்தில் இறங்கி வெள்ள நிவாரணப் பணிகளை இடையூறு ஏற்படுத்துவதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டியுள்ளார்.(ஓ-8)

# மேற்கு வங்கத்தில் தொண்டர்கள் உயிரிழப்பு

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ், கம்யூனிஸ் ஆகிய கட்சிகளின் தொண்டர்களிடையே ஏற்பட்ட வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 4பேர் கொல்லப்பட்டுள்ளனர். (ஒ)

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

காங்கேசன்துறை, மல்லாகம்

1. கீழ் குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் 12—09—2000 ஆம் திகதி மு.ப. 10 00 மணிவரை வலி. வடக்கு பிரதேச சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அன்று பி.ப. 2 00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.
2. இக்ராட் நிறுவனத்தில் "தரம் எம் 9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
3. கேள்விப் பத்திரங்கள் 29—08—2000 ஆம் திகதி தொடக்கம் 11—09—2000 ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை எமது அலுவலகத்தில் வழங்கப்படும்.
4. கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "தலைவர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்" என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித் தெரு யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் 12—09—2000 ஆம் திகதி மு.ப. 10 00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
5. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்படல் வேண்டும்
6. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.


| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவப் பணம் |
|---|---|---|
| 1. கூத்தன்சீமா சந்தை (மரக்கறி, மீன், இறைச்சிக்கடைகள் அமைத்தல்). | 5000/- | 500/- |
| 2. மல்லாகம் பொது நூல் நிலையத்தில் வாகனப் பாதுகாப்புக் கொட்டகை அமைத்தல். | 1000/- | 250/- |
| 3. மகாத்மா வீதி | 5000/- | 500/- |
| 4. பரிசுத்த அன்னை வேளாங்கண்ணி வீதி | 5000/- | 500/- |
| 5. சிகரட் கம்பனி வீதி | 1000/- | 250/- |
| 6. சென்ஜேம்ஸ் வீதி | 1000/- | 250/- |
| 7. கும்பலை வீதி | 5000/- | 500/- |

**திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன் ஜே. பி. யு. எம்.**
தலைவர்.
வலிகாமம் வடக்குப் பிரதேச சபை
காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
(காங்கேசன்துறை) மல்லாகம்.
29—08—2000

(சி/12742)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சி. கணபதிப்பிள்ளை**
மலர்வு
**25-12-1909**

திருமதி
**நாகம்மா கணபதிப்பிள்ளை**
[இளைப்பாறிய ஆசிரியர்கள்]
மலர்வு
**25 12-1910**

உதிர்வு
**14-09-1996**
**திதி: 30-08-2000**

இல்லத்தின் ஒளிவிளக்குகளாய்
இருள் விலக்கும் தெய்வங்களாய் — வாழ்ந்து
இறையடி சேர்ந்த எம் தெய்வங்களை
பல்லாண்டு காலம் கழிந்தாலும் மறப்போமா?

ஆத்மா சாந்தி பெற வேண்டி நிற்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கட்டப்பிராய், யாழ்ப்பாணம். (77592)

# சந்நிதியான் உற்சவ விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக. 30

தொண்டமனாறு சந்நிதி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று புதன்கிழமை ஞான பண்டித சேவா சுரபி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளையின் அறிமுகவுரையுடன் மந்திகை, தாவடி மற்றும் கொக்குவில் சாயி சமித்தி நிலையங்கள் வழங்கும் பஜனையும்—

நாளை வியாழக்கிழமை 'அன்னைக்கந்தனின் மகத்துவங்களும் தெய்வீகத் திருவிழாக்களும்' எனும் பொருளில் சி நந்தகுமார் வழங்கும் சொற்பொழிவும்—

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 'வாக்கிற்கு அருணகிரி' எனும் தலைப்பில் சிவமகாலிங்கத்தின் சொற்பொழிவும் —

இடம்பெறவுள்ளன.

(சு-173)

யாழ்ப்பாணம்

# அத்தியடி பிள்ளையார் கோயில்
# விநாயகர் சதுர்த்தி விழா

**01-09-2000 வெள்ளிக்கிழமை**

★ காலை 8 00 மணி முதல் அஷ்டோத்ர (108) சங்காபிஷேகம்

★ மாலை 3.30 மணிக்கு வசந்தமண்டப பூசையும் தொடர்ந்து சக்தி கணபதி பூசையும் நடைபெற்று பிள்ளையாரின் திருவீதி உலாவும் நடைபெறும்.

★ சக்தி கணபதிபூசை செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்தின் அலுவலகத்தில் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

விழா உபயகாரர்:- திரு.பரமானந்தன் குடும்பம்

(77805) —கோயில் நிர்வாகம்

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி சின்னையா கவிதா**
(மாணவி, யா/கனகரத்தினம் ம. ம. வி)

மலர்வு
1980-12-16

உதிர்வு
1997-09 02

திதி: பிரதமை 30-08-2000

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட
அன்புச் செல்வமே—கவி
நீ எங்களை விட்டுப் பிரிந்து மூன்றாண்டு சென்றும்
ஆறவில்லை அம்மா!— ராசன்
உன் பிரிவுத் துயர் எங்கள் மனதை விட்டகலாது!
கவிதா! உன்னைப் பிரிந்து வாடும் துயரம்
எத்தனை ஆண்டு சென்றாலும் மாறாது கவிக்குட்டி.

உன் பிரிவினால் வாடும்
அப்பா, அம்மா,

| | |
|---|---|
| அண்ணாமார்: | சி. திருமாறன்—சுவிஸ், |
| | சி. திருமாவளவன்—சுவிஸ், |
| அக்காமார்: | ந. திருமலர்—ஜேர்மனி, |
| | ம திருமகள்—ஜேர்மனி, |
| | தெ. திருவளர்ச்செல்வி—ஜேர்மனி, |
| அத்தான்மார்: | ம நவநீதன் ஜேர்மனி, |
| | அ. மகிழ்ரூபன்—ஜேர்மனி, |
| | பெ. தெய்வேந்திரம்—ஜேர்மனி, |
| அண்ணிமார்: | தி. கல்யாணி—சுவிஸ், |
| | தி. சர்மிளா—சுவிஸ், |
| பெறாமக்கள்: | ந திவாகர்—ஜேர்மனி. |
| | ந. சிவன்யா—ஜேர்மனி, |
| | ந. நாறுஜா—ஜேர்மனி, |
| | ம. ஓவியா (கஜோல்)—ஜேர்மனி, |
| | ம. ஆதவன்—ஜேர்மனி. |

தி. சின்னையா (தந்தை).
கவிதாலயம்,
இல. 06, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம். (77685)

# உதயன்

## பெருங்குரங்கு ஆகிவிடுமோ...?

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வென பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வகுத்துள்ள அதிகாரப் பரவல் திட்டம் உள்ளடங்கிய அரசமைப்புச் சீர்திருத்தமே ஒக்ரோபர் தேர்தலில் தென்னிலங்கையில் விவாதத்துக்குரிய விடயமாகப் போகிறது.

இந்த அரசமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதில் உள்ள தடங்கல்களை நீக்குவதற்காகப் புதிய நாடாளுமன்றத்தை அரசமைப்பு இயற்றும் சபையாக மாற்றுவதற்கு பொ.ம.ஐ. முன்னணி மக்கள் ஆணையைக் கோரவிருப்பதாகவும் அறியவந்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அரசமைப்பைத் திருத்துவதற்கு மக்கள் ஆணையைப் பெறுவதற்கு உத்தேசித்திருக்கிறது. அதேவேளை, பொ.ம.ஐக்கிய முன்னணியின் அரசமைப்புக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கி, அதனை முன்னிறுத்தி தேர்தலில் போட்டியிடுவதற்கும் தெற்கில் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

சிங்கள தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்க அரசமைப்பை எதிர்ப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டு போட்டியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த முன்னணியில் ஜே.வி.பி., சிங்கள பூமி புத்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சிங்கள உறுமய என்பனவற்றைச் சேர்ப்பதற்கு மகாசங்கத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் செயலாற்றி வந்தனர்.

ஆனால் அவர்கள் எதிர்பாராத விதமாக, தினேஷ் குணவர்த்தனாவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி திடீரெனப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் கூட்டுச் சேர்ந்துள்ளது. அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்தாகிவிட்டது!

தினேஷ் குணவர்த்தனாவின் இந்தத் திடீர்ப் பாய்ச்சலால் மகா சங்கத்தின் பிரமுகர்களும் ஏனைய பேரினவாதிகளும் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்; அரசமைப்புச் சீர்திருத்தத்தை ஒரே அணியில் எதிர்த்து மக்கள் ஆதரவைப் பெறமுடியவில்லையே என்று கவலையும் அடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசமைப்புச் சீர்திருத்தம் - அதிகாரப் பரவல் திட்டம் - தெற்கில் முக்கிய தேர்தல் விவகாரமாகப் போகின்றது என்பதனை மகா சங்கத்தினரின் முயற்சி மேலும் உறுதிப்படுத்துகின்றது. இது விடயத்தில் கலங்கித் தெளிவது நல்லது தான்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் சிங்கள மக்களின் நிலைப்பாடு என்ன; தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற விருப்பம் அவர்களிடம் உண்டா; எத்தகைய உரிமைகளை வழங்குவதற்கு விரும்புகிறார்கள் என்பனவற்றை அறிந்துகொள்ள முடியும்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் இது விடயத்தில் தெரிவிக்கும் கருத்துக்களைச் சிங்கள மக்கள் ஆதரிக்கின்றார்களா; பேரினவாதப் போக்கு அவர்களிடம் இன்னமும் ஊறிப்போயுள்ளதா; போர் தொடர வேண்டும் என்று விரும்புகிறார்களா, இல்லையா; என்பன போன்ற கருத்துத் தெளிவுகள் தேர்தல் விவாதம் மூலம் வெளிவரும்.

ஆனால் ஒன்று -

இம்மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்த நகலில் உள்ள தமிழர் நலன் நாடிய சில அம்சங்கள் கூட இனிமேல் நீக்கப்படக் கூடிய ஆபத்து உண்டு.

சிங்கள உறுமய, பூமிபுத்திர போன்ற சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் தலையெடுப்பதற்கு முன்னரே, மிக நீண்ட காலமாக, தமிழர்களின் உரிமைகளுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் எழுப்பி வருபவர் தினேஷ்குணவர்த்தனா.

அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நிச்சயமாக அரசமைப்புச் சீர்திருத்தத்தில் - அதிகாரப் பரவல் திட்டத்தில் - மாற்றங்களைக் கொண்டுவரும். அதில் உள்ள சில நல்ல அம்சங்களும் வெட்டப்பட்டுவிடும் - நீக்கப்பட்டுவிடும் - என்று எதிர்பார்க்கலாம்.

மொத்தத்தில் ஒக்ரோபர் தேர்தல் தமிழர்களால் சிறிய அளவிலேனும் ஏற்றுக் கொள்ள முடியாத அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு வழி செய்தாலுங்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இது பிள்ளையார் பிடிக்கப்போய், பெருங்குரங்கான கதையாகவும் முடிந்து போகலாம்! பொறுத்திருந்து பார்ப்போம்!

### மன்னார், வெலிஓயாவில் இருந்து

# வாக்குப் பெட்டிகளை ஏற்றிவர ஹெலிகளின் உதவி கோரப்படும்!

கொழும்பு,ஓக.30

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சில வாக்களிப்பு நிலையங்களிலிருந்து வாக்குப் பெட்டிகளையும், தேர்தல் அலுவலர்களையும் ஏற்றிவர விமானப்படை ஹெலிக்கொப்டர்களின் உதவி கோரப்படவுள்ளது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த தலைமன்னாரில் நிறுவப்படவிருக்கும் இரு வாக்களிப்பு நிலையங்களிலும் வெலிஓயாவில் அமைக்கப்படவிருக்கும் நான்கு வாக்களிப்பு நிலையங்களிலும் இருந்து வாக்குப் பெட்டிகளை எடுத்துவரவே ஹெலிக்கொப்டர்களின் உதவி கோரப்படும்.

வவுனியா அரசாங்க அதிபரும், வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான க.கணேஷ் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-6)

### கொழும்பு மாநகரசபை குண்டு வெடிப்பு

# கைதான மகனும் தந்தையும் கொழும்பு நீதிமன்றில் விடுதலை

கொழும்பு மாநகரசபைக் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மகனும், தந்தையும் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதம நீதிவான் டி.ஜி. குலதிலகவினால் விடுதலை செய்யப்பட்டனர்.

குருநாதன் சிவநாதன், செல்லையா குலவீரசிங்கம் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி ஜனாதிபதி கலந்துகொண்ட இறுதிப் பிரசாரக் கூட்டம் மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற போது இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் பலர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

செல்லையா குலவீரசிங்கம் வெள்ளவத்தையில் வைத்து 28-02-2000 இல் அவசரகாலச் சட்டத்தின்கீழ் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். கொழும்பு நகரின் நிலைமைகள் குறித்தும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்தும் அவ்வப்போது விடுதலைப்புலிகளுக்குத் தகவல் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

கனடாவிலிருந்து தாயாரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வந்தபோதே குருநாதன் சிவநாதன் கைதுசெய்யப்பட்டார். இரண்டு கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தார் என்ற காரணத்தினாலேயே சிவநாதன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். (ஐ-6)

# அரசுக்கு வழங்கும் ஆதரவை இ.தொ.கா. விலக்க வேண்டும்

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு,ஓக.30

'பொ.ஐ.முன்னணி அரசில் உள்ள அமைச்சர் பதவியை உடனடியாக இராஜினாமாச் செய்து அரசுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் அஷ்ரப் - தொண்டமானுக்கு இடையே ஏற்பட்ட உடன்படிக்கையை அமுல் செய்யமாட்டோம்'

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.காங்கிரஸ் தலைமைப் பீடத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் இந்த அறிவிப்பினால் இ.தொ.காங்கிரஸ் மத்தியில் சிக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த 26ஆம் திகதி அதன் அரசியல் குழு கூடி இது விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தபோதும் இறுதி முடிவைக் காணத் தலைவர்கள் தவறிவிட்டனர் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும்போது சிறுபான்மையினர் என்ற வகையில் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து இ.தொ.கா. போட்டியிடுவதும் இக்கட்சிக்கு தேர்தல் சின்னம் இல்லாமையால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதுமே இந்த இரு கட்சிகளின் உடன்படிக்கையின் பிரதான அம்சங்களாகும்.

தற்பொழுது அமைச்சர் பௌசிக்கும், அஷ்ரப்புக்கும் இடையில் எழுந்துள்ள பிரச்சினையால் இ.தொ. காங்கிரஸ் பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10-1.86)

### அரசமைப்பை அவமதித்ததற்காக

# மக்களிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கோரட்டும்!

### ரணில் கூறுகிறார்

கொழும்பு,ஓக.30

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடனாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்பதற்காக நாட்டின் அரசமைப்பையும் சட்டங்களையும் அவமதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கோரியுள்ளார்.

கேம்பிரிட்ஜ் பிளேசில் உள்ள தனது அலுவலகத்தில் தொழில் துறை நிபுணர்களுடன் நடத்திய சந்திப்பின்போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு ஜனாதிபதி என்ற முறையில் தனது வரையறைகளை மீறியே இந்த அரசமைப்புச் சட்டமூலத்தை ஜனாதிபதி வெளியிட்டிருக்கின்றார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றி புதிய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தும் கூட சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற ஜனாதிபதி முயன்றமை விரோதமான நடவடிக்கையாகும். இதற்காக ஜனாதிபதி மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் - இவ்வாறு ரணில் அங்கு மேலும் தெரிவித்தார். (ஐ-6)

> **உதயவாக்கு**
>
> **பதவியை விரும்புவோர் மக்களுக்காக வாழ்தல் இல்லை.**
>
> *- காந்தியடிகள்*

### நிவாரண விநியோகம்

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம், ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான ஓகஸ்ட் மாதத்துக்குரிய நிவாரண விநியோகம் இன்று புதன்கிழமை பூர்தியடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)


> **நாளை**
>
> **ஆவணி 15**
>
> **வியாழக்கிழமை**
>
> *திதி:* துதியை பிற்பகல் 1.16 வரை,
>
> *நட்சத்திரம்:* உத்தரம் பிற்பகல் 4.53 வரை.
>
> *சுபநேரம்:* 7.35 - 9.05
>
> *ராகுகாலம்:* 1.35 - 3.05
>
> (இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# அஞ்சலிக் கூட்டம்

கப்டன் அமரர் கா.மோகனதாஸின் 16ஆவது வருட நினைவஞ்சலிக் கூட்டம் நாளைமறுதினம் (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3.00 மணிக்கு கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலைக்கு அருகில் நடைபெறும்.

பருத்தித்துறை நகரசபை முன்னாள் செயலாளர் என்.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த அஞ்சலிக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் உரை நிகழ்த்துவார்கள். (ஐ-109)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## திருமண வாழ்த்து

வேடநம்பி மகள் செல்வி வள்ளி தன்னை
வெள்ளிமலை யான்தந்த நல்லை வேலா!
நாடறிய நீமணக்கும் மணநாள் இன்று
'நல்வாழ்வு வாழ்க" வென நிறைவாய் வாழ்த்திப்
பாடுகின்றான் இனப்பகையின் கொடும்போர் தன்னில்
பற்றுமிகு குடும்பமதைப் பலி கொடுத்து
ஓடெடுத்துக் கண்ணீரிற் கரைந்து வாழும்
உன்னன்பர் கூட்டத்துள் ஒருவர் தானே.

*- அராலி பரமேஸ்வரசர்மா*

## மாவிளக்கின் சுகந்தம் மணக்குதையா!

(காத்தவராயன் கூத்து மெட்டு)

மாவிளக்கின் சுகந்தம் மணக்குதையா - கந்தா
மாசற்ற தேன்தினையின் இணக்கமையா
பாவிளக்கு வர்னில் பரவுதையா - உன்மேல்
பாமாலைகள் அதில் வருகுதையா
சந்தனத்தால் உனக்குச் சாத்தலையா - பன்னீர்
அத்தருடன் உன்மேல் ஊற்றலையா
சாம்பிராணி வாசம் பெருகுதையா - புகையில்
சஞ்சலங்கள் எல்லாம் கருகுதையா
கற்பூர தீபமெங்கும் கமழுதையா - ஒளியில்
கடுவினைகள் எல்லாம் அமிழுதையா
சொற்பத நாமமெங்கும் சுடருதையா - உந்தன்
அற்புத அருளெங்கும் பெருகுதையா
மலர்களினால் உனக்கு மஞ்சமையா - பக்தர்க்கு
மலர்ந்திடும் உன்விழியே தஞ்சமையா
பாவையர் இருவரும் அருகிலையா - உன்
பக்தர்கள் பாதத்தின் மருங்கிலையா

*- பழையூர் கு.சி.சுந்தரம்பிள்ளை*

## இளங்குயில் கூவுது பார்!

கூவுது பார் குயில் கூவுது பார் இளங்குயில்
கூவுது பார் குயில் கூவுது பார்
நல்லைக் குடிகுமரா குறத்தி மணாளா
அல்லலறுத்தாளும் முருகா குகாவென்று - கூவுதுபார்
கற்பூர வேலனே கார்த்திகைப் பாலனே
ஆறிரு கையானே ஆறுமுகா குகாவென்று - கூவுதுபார்
இளங்குயில் கூகூகு கூகுவென்று
கூவுதுபார் குயில் கூவுதுபார்.

*- நல்லூர் கந்தையா*

## நாளும் தாங்கும் நல்லூரானே!

பொல்லா நவுணைப் புல்லா ரேவும்
சொல்லற் சிதறும் சீர்நா டிதனை
வில்லா முன்தனி வேலா யுதத்தால்
நல்லாய் ஆளாய் நல்லூ ரானே

இடமே தறியா திடம்விட் டாடி
சடமே யானோம் சாய்ந்தே வீழ்ந்தோம்
திடமே யிழந்தோம் திகைத்தோம் எம்முன்
நடமே துனக்கு நல்லூரானே

மூளும் வினையை முற்றாய் அழித்து
ஆளும் தமிழை அரியணை ஏற்றி
வாழும் வழியை வந்தே காட்டு
நாளும் தாங்கும் நல்லூரானே.

*- ஸ்ரீ.சக்திகிரீவன்*

## பெரும் பெருமானே போற்றி!

மாநிலாரு யாகனார்க்கும் வழிவழியடி ஓம பூண்டு
பூதிகண்டிகைகள் போற்றிட பொற்புறப் பணிந்து தூய
வேத நல்லாகமங்கள் வேண்டிய புராணங்கள்
கீத நற் திருமுறைகள் கிளர் ஞான சாத்திரங்கள்
ஓதி நன் ஞானமோங்க ஒளிர் சைவ வேதியர்கள்
நீதியும் வளமும் வாழ வாழ்த்திடும் பதி நல்லூரிற்
சோதி நற்சுடராய் மிக்க சுடரொளி விளக்குமாகிப்
பேதித்த நமை வளர்க்கும் பெரும் பெருமானே போற்றி

*- சைவப் புலவர் ஏ.அனுசாந்தன்*

# வாக்காளர் கடமை

நாடு சுதந்திரம் பெற்றபின் இற்றைவரை பத்துப் பொதுத்தேர்தல்களை நாம் சந்தித்து விட்டோம். "நடக்கவிருக்கும் பொதுத்தேர்தல், இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானது" என்ற கருத்து ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் கூறப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

எனினும் -

சர்வரோக சஞ்சீவி எனப் பிரமாதமாகப் பிரசாரப்படுத்தப்பட்ட சந்திரிகா அரசின் தீர்வுத்திட்டம் -

தமிழ் மக்களின் அபிலாசைகளைச் சிறிதளவும் பூர்த்தி செய்யவில்லை எனத் தமிழ்த்தரப்பினரும் -

தமிழ் மக்களுக்கு அதிக உரிமைகளைக் கொடுத்து, இந்த நாட்டின் சிங்கள பௌத்த மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்குகின்றது எனப் பேரினவாதிகளும் -

நேரெதிர்க் காரணங்களுக்காகத் தெரிவித்த தீவிர எதிர்ப்பினால் நாடாளுமன்றத்திலிருந்து மீளப்பெறப்பட்டுள்ள இவ்வேளையில் -

புதிய நாடாளுமன்றத்தில் இதே தீர்வுத்திட்டத்தில், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றியே தீருவோம் என ஜனாதிபதியும் பொ.ஐ. முன்னணியினரும் சூளுரைத்துள்ள இவ்வேளையில் -

தேர்தலில் வெற்றி பெற்றவுடன் விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, சிங்கள தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்துள்ள இவ்வேளையில் -

இராணுவத்திடமிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும் பகுதியையும் யாழ். குடாநாட்டிற் கணிசமான பகுதியையும் மீட்ட விடுதலைப் புலிகள், யாழ்ப்பாணத்தின் எஞ்சிய பகுதிகளை மீட்பதற்கு எப்போது போர் தொடுப்பர் என்பதை எவராலும் சரியாக ஊகிக்க முடியாத இவ்வேளையில் -

களத்தில் நிற்போரின் மௌனத்தையும் "ஓய்வை"யும் அவர்களின் பலவீனமாகவும் தமது பலமாகவும் இராணுவ ரீதியான வெற்றியாகவும் சிங்கள மக்களுக்கு அரசுத் தரப்பினர் "காட்டி" வரும் இவ்வேளையில்-

மாறிவிட்ட அரசியற் சூழ்நிலையில், வட - கிழக்குத் தமிழ்மக்களின் மனநிலை, இறுதி இலட்சியம் எவையென்பதை அகில உலகமுமே மிகுந்த ஆவலுடன் அறியத் துடித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் -

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை, இத்தேர்தல் மிக முக்கியமானது என்பது உண்மைதான்.

தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்ற அடிப்படையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எம்மை நாமே ஆளும் உரிமையுடன் வாழவேண்டும் என்பதை இந்நாட்டுத் தமிழ்மக்களின் ஒரே இலட்சியம் என்பதை அயலவருக்கும் அகில உலகினருக்கும் மீண்டும் ஒரு தடவை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும் வகையில் தமிழ்க் கட்சிகளிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமொன்றை உருவாக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையில், வாக்காளப் பெருமக்களின் கடமையும் பொறுப்பும் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

தன் கடமையையும் பொறுப்பையும் சரியாக உணர்ந்து, துணிவுடனும் தூர திருஷ்டியுடனும் அவற்றை நிறைவேற்றுவார்களா?

அல்லது -

## மணிமண்டபம்

இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன நான் உண்டு, என் சொந்த வேலைகளுண்டு - என்று ஒதுங்கி இருக்கப் போகிறார்களா?

தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக உணவை மறுக்கலாம்; உத்தியோகத்தை மறுக்கலாம்; மருத்துவ வசதியை மறுக்கலாம்; எவ்வித குற்றமும் செய்யாத நிலையிலும், வெறுஞ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யலாம்; சித்திரைவதை செய்யலாம்; சிறைக்குள் தள்ளலாம்; விசாரணையின்றி வருடக்கணக்காக அங்கே அடைத்து வைக்கலாம்; சுட்டுக் கொன்றுவிட்டு "பயங்கரவாதி" என முத்திரை குத்தலாம் என்பதே இலங்கையின் நடைமுறை என்ற உண்மையை புள்ளிவிவரங்களுடன் அகில உலகுக்கும் எடுத்துக்காட்டி, அதிகாரத்தில் உள்ளோரின் ஜனநாயக - சமாதான வேடங்களை அம்பலப்படுத்தக்கூடிய துணிவும் தர்மாவேசமும் மிக்கவர்களுக்கு வாக்களிக்கப் போகின்றார்களா?

அல்லது -

உதவி செய்தவர்; உத்தியோகம் கொடுத்தவர் என்பதற்காக சந்தர்ப்பவாதிகளுக்கு வாக்களிக்கப் போகிறார்களா? பணத்தையும் பதவியையும் கண்டு பல்லிளிக்காமல், மக்களின் விடிவிற்காகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கக்கூடிய இலட்சியவாதிகளுக்கு வாக்களிக்கப்போகின்றார்களா?

அல்லது -

அறிந்தவர், தெரிந்தவர், அயலவர், நண்பர் என்பதற்காக இந்தக் கட்சியில் ஒருவரும், அந்தக் கட்சியில் இன்னொருவரும், மற்றக் கட்சியில் வேறொருவருமாக ஒருவித "சாம்பார் பிரதிநிதி" உண்டாக வாக்களிக்கப் போகிறார்களா?

தமிழ் வாக்காளர்களே! உங்கள் நடவடிக்கைகளை உலகம் பார்த்துக்கொண்டு இருக்கின்றது; உங்கள் முடிவை அறிய அது காத்துக் கொண்டு இருக்கின்றது!

*(இடமின்மை காரணமாக இப்பத்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிவரவில்லை)*

*- சித்தன்*

## உயிரிழந்த புலிகளின் விவரம்

வவுனியா,ஓக.30

படையினருடன் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

அதன் விவரம் வருமாறு:-

கடந்த 26 ஆம் திகதி புல்மோட்டைப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் 2ஆம் லெப்டினன்ட் ஈழக்கதிர் (ஆறுமுகம் மனோகரன் - கிளிநொச்சி) -

அன்றையதினம் திருமலை மாவட்டம் அதிமாங்கனிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் கப்டன் மஜீந்தன் (கந்தையா துரைசிங்கம் - திருமலை) -

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளாலிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் மேஜர் தமிழேஷ் (மரியதாஸ் தெய்வேந்திரன் - மன்னார்) -

நேற்று முன்தினம் நாகர் கோயில் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் கபிலா (பரமசாமி புஸ்பராணி - யாழ்ப்பாணம்), பொய்கை (இராசலிங்கம் சறோஜினிதேவி - யாழ்ப்பாணம்) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். (க-8)

## சங்கீத சபை அறிமுகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.30

வட-இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான அறிமுகப் பரீட்சை எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இரண்டு தினங்களும் காலை, மாலை நடைபெறவுள்ள பரீட்சையில் சங்கீதம், பரதம், மிருதங்கம், நாடகம், பண்ணிசை ஆகியவற்றுக்கான பரீட்சைகள் இடம்பெறவுள்ளதாக வட-இலங்கை சங்கீத சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இந்தப் பரீட்சைக்கென சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைப் பரீட்சை நிலையமாகத் தெரிவு செய்தவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மண்டபம் 3 இல் அல்லது இராமநாதன் கல்லூரி மண்டபம் 3 இல் தோற்றலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-10)



வடமராட்சியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் இலவச மருத்துவ சேவையை டாக்டர் ஈ.யோகேஸ்வர தேவன் பிரதி ஞாயிறு தோறும் நடத்தி வருகிறார்.

தேவரையாளி இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாமில் அவர் சிகிச்சை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (ஐ-179)

*படம்: வடமராட்சி செய்தியாளர்*

# அச்சுவேலி ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்காகக் காணி

## அபிவிருத்திச்சபை கொள்வனவு

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு புதிய நிர்வாகப் பகுதி கட்டடங்கள் கட்டுவதற்கு காணி ஒன்றினை வாங்குவதற்காக வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் பொதுமக்களிடம் இருந்து நன்கொடையாக 5 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு அருகில் உள்ள 7 பரப்புக் காணியே ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்கெனக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

ஆஸ்பத்திக்கென மேலும் நிலங்களைக் கொள்வனவு செய்ய ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபை முயற்சி எடுத்து வருகின்றது.

இந்த ஆஸ்பத்திரியில் அண்மைக்காலமாக நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-180)

## ஜே.வி.பி. வேட்பாளர் கூட்டம்

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) வேட்பாளர் பட்டியல் மூலம் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள சகல வேட்பாளர்களுக்குமான விளக்கமளிக்கும் மாநாடு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மொரட்டுவ ஜனகலா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஜே.வி.பி. வேட்பாளர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் எனக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கேட்டுள்ளார். (ஐ-6)

## ஓய்வூதியர் நலன்களுக்காக குழு அமைப்பு

ஓய்வூதியர்கள் தொடர்பான சகல விவரங்களையும் ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கெனக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுச் சேவை ஓய்வூதியர்களுக்கான நம்பிக்கை நிதியமொன்றை நாரஹேன்பிட்டியில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 16 ஆம் நாள் (01.09.2000) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபதினத்தன்று காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரையுள்ள துலா லக்கின சுப முகூர்த்தத்தில்

திரு. திருமதி பொ. தர்மலிங்கம்
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**தேவராஜா**
அவர்களுக்கும்

திரு. திருமதி க. பொன்னையா
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**வடிவாம்பிகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் இல. 195, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் கதிரேசன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இருவீட்டார் அழைப்பு

※ இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி பு. தர்மலிங்கம்
*இல.6, அண்டர்ஸன் வீதி,*
*நீர்கொழும்பு.*

திரு. திருமதி க. பொன்னையா
*28, குருதெனிய வீதி,*
*அம்பிட்டிய*
*கண்டி.*

திருமதி புவனேஸ்வரி தர்மலிங்கம்
*கும்பப்பிள்ளை,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்*

*பருத்தித்துறை.*

(7718)



உ

# திருமண வாழ்த்துக்கள்

மணமகன்
திரு. திருமதி பரநிருபசிங்கம்
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**அருள்ராஜன்**
(தபாலகம், வட்டுக்கோட்டை.)

மணமகள்
திருமதி இ. கனகரத்தினம்
அவர்களின்
ஏக புத்திரி
**சாந்தநாயகி**
(மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்)





இன்று (30-08-2000) புதன்கிழமை வட்டு. கண்ணகி அம்மன் கோயிலில் திருமணத்தில் இணையும் மணமக்களை சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

து. பாக்கியநாதன் குடும்பத்தினர்,
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

(C/12739)

# யூதரின் பரந்த இஸ்ரேல் உருவானது போன்றே
# திராவிட நாடு ஸ்தாபிக்க பிரபாகரன் திட்டம்

**ஒரு புறத்தில் பலவீனமுற்றுள்ள இந்திய மத்திய அரசும் ஒத்துழைப்பை வழங்கும் தமிழ் நாடு மாநில அரசும், மறுபுறத்தில் தனது கட்டுப்பாட்டுக்குள் உள்ள தமிழ் பகுதிகளும் பலவீனமுற்று சிதைவடைந்துள்ள சிங்கள நிர்வாகமும் இவற்றின் அடிப்படையிலேயே தேர்தலுக்கு முன்பான பிரபாகரனின் போர்த் திட்டம் அமைந்திருக்கும் எனக் கூறுகிறார் இக் கட்டுரை ஆசிரியர். 27-08-2000 திகதிய ஞாயிறு 'லங்காதீப' பத்திரிகையில் 'கும்பகர்ண' என்ற புனை பெயரில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

ஒக்டோபர் 10ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் பல விடயங்கள் நடந்தேறவுள்ளன. தற்போதுள்ள நிலைவரங்களின்படி தேர்தலின்போது முக்கிய தொனிப் பொருளாக அமையப் போவது சமஷ்டி அரசமைப்புத் திட்டமாகும். இது அரசுக்குச் சாதகமற்றதாகும்.

அரசமைப்புத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதை நிறைவேற்ற எடுத்த வெற்றிபெறாத முயற்சிகள் காரணமாகவும், தேர்



தல் பிரசாரத்தின் போதும் அதை முன்னெடுப்பதாலும் அது தேர்தலைத் தீர்மானிக்கும் விடயமாக அமைந்துள்ளது. அரசாங்கத்தின் சுலோகமாக அரசமைப்புத் திட்டம் அமைந்துள்ள வேளையில் ஐ.தே. கட்சி பொருளாதார விடயங்களைத் தாங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது முன்வைத்துள்ளது. இதற்குக் காரணம் அரசமைப்புத் திட்டம் தொடர்பாக இரு தரப்புத் தலைமைத்துவமும் வெளிநாட்டு ஆலோசகர்களும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருப்பதே ஆகும்.

## குறுக்கு வழி

அரசமைப்புத் திட்டம் தொடர்பாக உருவான சிங்கள - பௌத்த சக்திகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரு தரப்பினரும் குறுக்கு வழிகளைத் தேடுகின்றனர். போலியான சிங்கள, பௌத்த தோற்றத்தை இரு தரப்பினரும் உருவாக்க முனைந்து வருகின்றனர். ரத்னசிறி விக்கிரம நாயக்க அரச தரப்பின் சார்பிலும் கருஜெயசூரிய ஐ.தே. கட்சி சார்பிலும் ஏற்கனவே இந்தப் பணியை ஆரம்பித்துள்ளனர். இது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் பின்பற்றப்பட்ட கொள்கையாகும். அன்று ஜே.ஆர்.சிங்கள பௌத்தர்களைக் கவர பிரேமதாசா மற்றும் சிறில் மத்தியு ஆகியோரைப் பயன்படுத்தினார். பின்னர் அது ஐ.தே.கட்சிக்குள் ஜே.ஆர். மற்றும் பிரேமதாசா பிரிவுகளைத் தோற்றுவித்தது.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட வேளையில் ஐ.தே.கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் துலாம்பாரமாகத் தெரிந்தது.

எதிர்வரும் தேர்தலின்போது சிங்கள, பௌத்தர்களின் வாக்குகளைப் பெற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கட்சியும், ரத்னசிறி விக்கிரமநாயக்காவையும் கரு ஜெயசூரியாவையும் ஈடுபடுத்தியுள்ளன. இந்த முயற்சியானது பொ.ஐ. முன்னணியில் சந்திரிகாவின் தலைமைக்கும் ஐ.தே.கட்சியில் ரணிலின் தலைமைக்கும் அச்சுறுத்தலாக அமைய அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

## அமைதியான தேர்தலை பிரபாகரன் அனுமதிக்கமாட்டார்

இப்போதைய அரசியல் நிலைமையில் பலரால் கவனம் செலுத்தப்படாதவர், ஆனால் மிகவும் முக்கியமானவர் பிரபாகரன் ஆவார். சந்திரிகாவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஓர் "உறுமலாக" பிரபாகரன் நவம்பர் முதல் வாரத்தில் வன்னியில் தாக்குதல் களைத் தொடுத்திருந்தார். டிசம்பர் 18 ஆம் திகதி அவர் மேற்கொண்ட தந்திரோபாய நடவடிக்கை (ஜனாதிபதி மீது குண்டுத் தாக்குதல்) வெற்றிபெற்றிருந்தால் இன்று இந்த நாட்டின் தலைவர் பிரபாகரனே.

இந்தப் பொதுத் தேர்தலையும் அமைதியான சூழ்நிலையில் நடத்துவதற்கு பிரபாகரன் இடமளிக்கப் போதில்லை. புதிய அரசமைப்புத் திட்டத்தின் நோக்கம் அல்லது எதிர்பார்ப்பு பிரபாகரனின் சர்வதேச செயற்பாடுகளை முடக்குவது எனில் அவர்களிடம் இருந்து எதிர்த்தாக்குதலைக் கட்டாயம் எதிர்பார்க்கவே வேண்டும். பிரபாகரனுக்கும் இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் சிலவற்றால் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த அழுத்தங்களைக் கவனத்தில் கொள்ளாது பிரபாகரன் எதிர்த்தாக்குதல்களை ஆரம்பிப்பாராயின் உண்மையான தேர்தல் களம் அங்கேயே ஆரம்பிக்கும்.

அரசமைப்புத் திட்டமானது நாட்டைத் துண்டாட வழிவகுக்கும் எனக் கூறப்படுகிறது. நாடு துண்டாடப்படுவதை விரும்பும் அல்லது காத்திருக்கும் பிரபாகரன் அதை எதிர்க்கமாட்டார் அல்லவா?

அரசமைப்புத் திட்டத்தில சமஷ்டி அரசமைப்பு முறையே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரபாகரனின் யுத்த மற்றும் அரசியல் அபிலாஷைகள் சமஷ்டி அரசமைப்பிற்கு வெகு தூரத்திலேயே உள்ளன. உண்மையில் பிரபாகரனின் இறுதிக் குறிக்கோள்தான் என்ன? சுயாதீன தமிழ் ஈழ அரசை சிறிலங்காவின் வடக்கு - கிழக்கில் நிறுவுவதா? அல்லது முழு நாட்டையும் கைப்பற்றி எதிர்கால திராவிட நாடு அமைக்க வழி வகுப்பதா?

## வெற்றியை நோக்கி பிரபாகரன்

ஒன்று மட்டும் தெளிவு. அதாவது பிரபாகரன் யுத்த ரீதியான வெற்றி இலக்கை நோக்கிச் செல்கிறார் என்பதே அதுவாகும். அவர் யுத்தத்தில் வெற்றிபெறுவதாயின் தீர்க்கமான யுத்தத்தின் மூலம் சிறிலங்கா இராணுவத்தின் முதுகெலும்பை முறிக்கவேண்டும். அதில் அவர் வெற்றி பெற்றால் தேவை ஏற்படின் சிறிலங்கா முழுவதையும் கூடக் கைப்பற்றுவது அவருக்குப் பிரச்சினையாக இருக்க மாட்டாது.

## இஸ்ரேல் பாணி

இஸ்ரேலிலும் இதுவே இடம் பெற்றது. 1917இல் 'வல்கர்' உடன்பாட்டின்கீழ் தன்னாட்சி உரிமை பெற்ற பகுதியாக பலஸ்தீனத்தின் ஒரு பகுதி யூதர்களுக்குக்கிடைத்த போது தனியான நாடு கோரி யூதர்கள் நடைபோடுவார்கள் என எவரும் நினைத்திருக்கவில்லை. ஹிட்லரால் லட்சக் கணக்கில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் 2 ஆம் உலக யுத்தம்முடிவடைந்த கையோடு பெரியளவிலான தன்னாட்சி உரிமை கொண்ட - நாடு பற்றிய கனவு யூதர்களுக்குத் தோன்றியது. 1948 இல் அந்தக் கனவு நிறைவேறியது. அப்போது அராபிய - இஸ்லாம் இராணுவம் தீர்க்கமான யுத்தத்தில் தோல்வி கண்டது. பலஸ்தீனத்தின் தலைவிதி அதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னர் பெரியளவிலான இஸ்ரேல் நாட்டை அமைக்கும் நோக்கில் இஸ்ரேல் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக லெபனான், ஜோர்தான், சிரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் பகுதி



கள் 1956, 1967, 1973 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இஸ்ரேலினால் ஆக்கிர மிக்கப்பட்டதுடன் இஸ்ரேல் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடாக உருவெடுத்தது. வெளிநாடுகளில் வாழ்ந்த பத்து லட்சத்துக்கும் அதிகமான யூதர்கள் இஸ்ரேலுக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு அரசால் குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இதன் மூலம் யூதராச்சியக் கனவு யதார்த்தமானது.

பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கும்போது பிரபாகரனின் நிலைமையும் இதை ஒத்ததேயாகும். பொய்யைத் திறமையாக விதைத்து 2ஆம் உலக யுத்த முடிவில் யூதர்களுக்குக் கிடைத்த அனுதாபம் போன்ற அனுதாபத்தை மேற்குலக நாடுகளில் உருவாக்குவதில் பிரபாகரன் வெற்றிகண்டுள்ளார். இஸ்ரேலுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வரும் அமெரிக்கா, இஸ்ரேலில் இருந்து பலஆயிரம் மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது. ஆனால் பிரபாகரனுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நாடான ( மாநிலமான) தமிழ் நாடு மிக அண்மையில் அமைந்துள்ளது. ஆனையிறவு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தமிழ நாட்டிலும் மீண்டும் திராவிட நாடு குறித்த எழுச்சி உருவாகியுள்ளது.தமிழ் நாட்டில் தி.மு.க திராவிடநாட்டுக் கோரிக்கையை தந்திரோபாய ரீதியிலேயே கைவிட்டுள்ளது என ஆனையிறவு வீழ்ச்சியை அடுத்து கருணாநிதி தெரிவித்துள்ளார். துரதிஷ்டவசமாக தற்போது இந்தியா பொருளாதார ரீதியில் ஸ்திரநிலையை அடைந்து கொண்டு வந்தாலும் அரசியல் ரீதியாகத் துண்டாடப்பட்டுள்ள ஒரு நாடாகும்.

தமிழ் நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை மாற்றீடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரினும் பிரிவினைவாத சக்திகளை அம்மாநிலத்தில் முடக்க முடியவில்லை.

பொருளாதார ரீதியான சக்திகளால் பிரிவினைவாதத்தையும் இனவாதத்தையும் முற்று முழுதாகக் கட்டுப்படுத்தலாம் எனப்பலர் நினைக்கிறார்கள். மார்க்ஸிச வாதிகள் மாத்திரமன்றி ஒரு சில பிரபல பௌத்த தேரர்கள் கூட வடபகுதிப் பிரச்சினை பொருளாதாரக் காரணங்களால் உருவாகின என எண்ணுகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சி கூட பொருளாதார ஸ்திரத் தன்மையை உருவாக்கினால் பிரிவினைவாதத்தைத் தோற்கடிக்கலாம் என இரகசியமாகக் கூறி வருகின்றது.

இது புகழ்பெற்ற பொய்யாகும். ஸ்பானியாவில் 'பாக்ஸ்' பிரிவினைவாதம் பொருளாதாரப் பாதிப்புக்களால் இவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெறவில்லை. கனடாவில் "கியூபெக்" மாகாணம் தனியாகப் பிரிய முயல்வதற்கும் பிரித்தானியாவிலிருந்து வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து ஆகியன பிரிய முயல்வதற்கும் பிரான்சில் இருந்து 'கோர்ஸிகா' பிரிய முயல்வதற்கும் பொருளாதாரப் பிரச்சினை காரணமில்லை.

## திராவிட நாடு

தமிழ் நாட்டில் திராவிட நாடு உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் திரு.வி.கல்யாணசுந்தரம் (1883-1953) என்பவரால் உருவாக்கப்பட்டது. தமிழ் மொழி உயர்ந்தது எனவும் திராவிட மொழிகள் ஆரிய மொழிகளிலும் பார்க்கச் சிறந்தவை எனவும் அவர் எடுத்துரைத்தார். திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் கலாசாரத்திலுள்ள வேறுபாடுகளை அவர் கோடிட்டுக் காட்டினார்.

ஆரிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எழுந்த மொழிப்போராட்டம் பின்னர் மதப் போராட்டமாக உருவானது. இந்தியாவின் உண்மையான தேசியக் கலாசாரம் திராவிடக் கலாசாரமே எனவும், பிராமணர்களும், ஆரியர்களும் ஆக்கிரமிப்பாளர்கள் எனவும் இனங் காணப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த இராவணன் ஒரு விடுதலை வீரன் எனக்கருதப்பட்டான். கலாசார எதிப்புப், இந்தி எதிர்ப்பு, பிராமணர் எதிர்ப்பு, இராமர் எதிர்ப்பு என எதிர்ப்புக்கள் இணைந்



தன. பரந்த திராவிட தாயகத்தின் ஒரு பகுதியாகவே ஸ்ரீலங்கா கருதப்பட்டது.

இராமாயணத்தை முதன் நிலைப்படுத்தி பாரதீய ஜனதாக் கட்சி எழுச்சி கண்டபோது திராவிட நாடு குறித்துக் கனவு கண்டவர்கள் மீண்டும் துயிலெழுந்தனர்.முதலில் அவர்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து பாரதீய ஜனதாக்கட்சியின் பிராமண - இராம சக்திகளைத் தடுக்க முற்பட்டனர். இரண்டாவதாக தந்திரோபாயமாக பாரதீய ஜனதாக் கட்சியுடன் இணைந்தனர்.

இதற்கிடையில் பிரபாகரன் வன்னியிலும் ஆனையிறவிலும் பாரிய யுத்த வெற்றிகளைப் பெற்றுக்



கொண்டார். இதனைத் தொடர்ந்து திராவிட நாடு என்ற விடயத்தில் கருணாநிதி, ராமதாஸ், மற்றும் நெடுமாறன் ஆகியோருடன் இணைந்து கொண்டார்.

**தமிழில்: கஜனி**

"சென்னை மாகாணம்" பின்னர் "தமிழ்நாடு" ஆக முன்னர் 1965இல் பெருமளவில் நிலவிய இந்தி எதிர்ப்பு உணர்வலையை ஒத்த உணர்வே தற்போது தமிழ்நாட்டில் நிலவுகிறது. 1967 இல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் உடனடியாக மாநிலத்தின் பெயரை "தமிழ்நாடு" என மாற்றியது. சென்னையிலுள்ள சென்.ஜோர்ஜ் கோட்டையிலுள்ள தலைமைச் செயலரின் மணிமனைக்கு "தமிழக அரசு தலைமைச் செயலகம்" எனப் பெயரிடப்பட்டது. இவ்வாறான நிகழ்வுகள் மூலம் தமிழ்நாட்டில் புதிய உணர்வு உருவாகி வருகின்றது. நீண்ட பிரிவினைப்போராட்டத்திற்கு தமிழ் நாட்டைப் பிரபாகரன் தயார் செய்து வருகிறார். ஈ.வே.இராமசாமியாலோ (பெரியார்) அல்லது சி.என். அண்ணாத்துரையாலோ அல்லது முத்துவேல் கருணாநிதியாலோ உருவாக்க முடியாத திரமிகு பிரிவினைவாதத்தை தமிழ்நாட்டில் உருவாக்குவதில் பிரபாகரன் வெற்றி கண்டுள்ளார்.

பிரபாகரனின் தந்திரங்கள் மிகவும் தெளிவானவை. அவரின் திட்டங்களை நிறைவேற்ற பலவீன மற்ற நிலையிலுள்ள இந்திய அரசும் தமிழ் நாட்டின் ஒத்துழைப்புமே தேவைப்படுகின்றது. மறுபுறத்தில் வடக்கு-கிழக்கில் அவரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிர்வாகமும் நாட்டின் ஏனைய பகுதிகளில் பலவினமடைந்து சிதைவுபட்டுள்ள சிங்கள நிர்வாகமும் அவருக்குச் சாதகமாய் உள்ளன. தேர்தலுக்கு முன்னர் பிரபாகரன் தனது போர்த் திட்டத்தை இவற்றின் அடிப்படையிலேயே செயற்படுத்துவார். ★

## இந்தத் தேர்தல் களத்தை ஒட்டி அவர் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

---

# பெருமளவு மதுசாரம், உபகரணங்கள் கைதடி வடிசாலையில் முடக்கம்

### பனை தென்னை வள கூ. சங்க பணியாளர் பாதிப்பு

தென்மராட்சி,ஓக.30

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியினால் கைதடியில் நடத்தப்பட்ட மதுசார வடிசாலையில் சுமார் இரண்டு கோடி 55 லட்சம் ரூபா பெறுமதியான மதுசாரமும் உபகரணங்களும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால கொத்தணியில் உள்ள சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய சங்கங்களுக்கு செயற்பட முடியாத அளவுக்கு பெரும் நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் இச்சங்கங்களில கடமையாற்றும் நூற்றுக்கணக்கான பணியாளர்களும் கொத்தணி அலுவலகத்தில் பணியாற்றும் முப்பது பணியாளர்களும் சம்பளங்கள் பெற முடியாத நிலையில் உள்ளனர்.


சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மதுசாரத்தயாரிப்புக்கெனப் பெறப்பட்ட ஆயிரக்கணக்கான போத்தல்களுக்குரிய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரணியில் நடத்தப்பட்ட வடிசாலை படையினரின் பாதுகாப்பு அரணுக்கு வெளியே இருந்ததால் தொடர்ந்து செயற்பட முடியாததால் கொத்தணிக்கு பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்புக்கு விடைத்தாள்கள்

அண்மையில் நடைபெற்று முடிவடைந்த ஜி.சீ.ஈ (உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது தொகுதி விடைத் தாள்கள் கடந்தவாரம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். கல்விவலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

# ஓராண்டு நினைவஞ்சலி



# குணசிங்கம் ஞானேந்திரன்

(குட்டி - கண்ணன்)

(கோபிகா ஆடையக உரிமையாளர்)

தோற்றம்
07 - 01 - 1977

மறைவு
10 - 09 - 1999

திதி: 30 - 08 - 2000

## நெஞ்சினிலே வாழ்கின்றாய்!

தோளணைத்துச் சிரிப்பாய் நண்பனே!
உனைத் தொலைத்த
நாளசைந்து போனதடா வருடமாய்;
கால்பதித்து நீ நடந்த தெருவெல்லாம்
பாழடைந்து கிடக்கப்பார்க்கின்றோம்
- எம்
ஊழ் நினைந்து அழுகின்றோம்!

தேர் சுமந்த மண்ணெல்லாம் நீ சுமந்தாய்!
வேல் சுமந்த வேலவன்
தான் சுமக்கவோ உனைக் கரந்தான்!
வார்த்தெடுத்த சிலைபோலுன்னுருவம்
வடிவேலன் உருவம் போல் தெரியுதடா!
வாழுகின்ற வயதிலுன்னை தவறவிட்டோம்
வாய்மூடி மனதாலே கதறவிட்டாய்!

நீ நடந்த தெருக்கடந்து விறகிலிட்டோம்
எரிந்துவிட்ட உடல் கரைத்து மீண்டு
வந்தோம்!
வருகின்ற வழியெல்லாம் நீ நின்றாய்
எரிகின்ற நெருப்பினிலும் நீயே நின்றாய்
எழுகின்ற காற்றினிலே சுவாசமானாய்
உதிரத்தில் உள் மூச்சில் உறைந்தே
நின்றாய்
இனியொரு யுகத்திலுமுனக்கு
மரணமில்லை!
இங்கெம் நெஞ்செல்லாம் வாழ்கின்றாயே!

வாழ்க்கையிலே உன் விலாசம்
தொலைத்துவிட்டோம்
வருவதற்கும் வழியிதென்று
தெரியவில்லை - வீடு
வருகின்ற மக்களெல்லாம் அதிர்ந்தே
போனார்
வருவாயோ? கண்ணெதிரே கண்ணா!
கண்ணா!
வந்தொரு நாள் அவர்கட்குன்
அன்பைச் சொல்வாய்
போகின்ற விலாசமெல்லாம் பொதுவே
என்று
விடுகின்ற பெருமூச்சில் விலகிநின்றே
வேடிக்கையிதென நகைக்கின்றாயோ!

*உன் பிரிவை நினைந்துருகும்*

அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
மாமாமார், மாமிமார், மைத்துனர், மருமகள்,
சித்தப்பாமார், சித்திமார்,
நண்பர்கள், உறவினர்கள்.

(C/12740)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்க் கந்தசாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி, முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணி வரை கானசுதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா நிகழ்ந்திவரும் 'மகாபாதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'நர்மர் பட்டா பிஷேகம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றுவரும் நிகழ்வில் இன்று 'வள்ளி திருமணம்' எனும் பொருளில் சைவப் புலவர் இ. ஸ்ரீதரனின் வில்லிசை நடைபெறும்.

(க-30-11)

மத்திய அரசு எழுதுநர் சேவை:

## நேர்முகப் பரீட்சைக்கு வராத 11 பேருக்கு இறுதிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஒக 30

மத்திய அரசு எழுதுநர் சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கும்படி அழைக்கப்பட்ட 70 பேரில் இதுவரை சமுகம் அளிக்காத பதினொரு பேருக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அன்று காலை 9 மணிக்குக் கீழ்க்கண்ட பதினொருபேரையும் செயலகத்தில் சமுகம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

ரி குகதர்மினி—விழிசிட்டி, எம் தீபா - முதலாம் தபால் கட்டை, பருத்தித்துறை, கே. என். பரமேஸ்வரன் — "தேவிவாசா", தியேட்டர் லேன், இணுவில், என். சந்திரகாசன் — செட்டித்தரை ஒழுங்கை, நெல்லியடி, பி. தர்சினி — மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, கே. மீனயோகினி — கேன்சன் லேன், மானிப்பாய் றோட், உடுவில், எஸ் சர்மிலா — நீதிமன்ற றோட், மல்லாகம், ரி. சுதா — பங்களா றோட், மீசாலை மேற்கு, எஸ் விஜித்திரா — 8/1, கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம், வி. ஜெயகாந்தன் — தெனி அம்மன் வீதி, புலோலி மேற்கு, எஸ். மலர்விழி — இல. 140, செல்லர் றோட், நல்லூர்.

(இ-3)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக. 30

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண எழுதுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுக்கான போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்காதவர்கள் அனைவரையும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள டி. எம். ஐ கல்வி நிறுவனத்தில் ஒன்றுகூடுமாறு சங்கம் கேட்டுள்ளது.

நியமனம் கிடைக்காதவர்கள் சார்பாக வழக்குத் தாக்கல் செய்வது சம்பந்தமாக இந்தக் கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 30

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லைக் கந்தன் உற்சவகால நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய சைவப் பெரியார்களைகௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நல்லூரில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் கலாபூசணம் வே. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரம்மஸ்ரீ வெங்கடாசல குருக்கள் ஆசியுரையினையும் யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. பாலசிங்கம், யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி க. தணிகாசலம்பிள்ளை மற்றும் வடக்கு — கிழக்கு மாகாணசபை உயர் அதிகாரிகள் பலர் வாழ்த்துரைகளையும் வழங்குவர். தொடர்ந்து சைவப் பெரியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

(க-15-173-30)

★ ★ ★

வலி.கிழக்கு, ஒக. 30

உரும்பிராய் மத்திய சந்தை திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சந்தை மைதானத்தில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. குகேந்திரனும் (ஜெகன்)— யாழ் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஓ. கமலநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-180)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### சுன்னாகம்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:
2000-08-31 — 2000-09-07 பிற்பகல் 2.00 மணி வரை.

02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:
2000-09-08 நண்பகல் 12.00 மணி வரை.

03. கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி:
2000-09-08 பிற்பகல் 3.00 மணி.

04. ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

| | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் |
|---|---|---|---|
| 01. | சோமராான் தோட்ட வீதி திருத்தம் | 3000 00 | 300 00 |
| 02. | தோம்பை வீதி திருத்தம் | 2500 00 | 250 00 |
| 03. | துரை வீதி திருத்தம் | 2000 00 | 200 00 |
| 04. | உதயசூரியன் குறுக்கு வீதி திருத்தம் | 1750 00 | 200 00 |
| 05. | பாடசாலை வீதி திருத்தம் (பிரதேச செயலர் அலுவலக முன்பாக) | 1750 00 | 200 00 |
| 06. | கந்தரோடைப் பிள்ளையார் கோயில் வீதி திருத்தம் | 2500 00 | 250 00 |
| 07. | உடுவில் மகளிர் கல்லூரி கிழக்கு வீதி திருத்தம் | 2000 00 | 200 00 |
| 08. | பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் வீதி திருத்தம் | 1500 00 | 200 00 |
| 09. | தம்பிமுத்து ஆசிரியர் வீதி திருத்தம் | 2000 00 | 200 00 |
| 10. | அந்திரான் கெலன்காமம் புதிய கிரவல் பாதை நிர்மாணித்தல் | 6000 00 | 750 00 |
| 11. | குளக்கரை வீதி திருத்தம் | 2000 00 | 200 00 |
| 12. | சிறுவர் பாடசாலைத் தளபாடங்கள் செய்தல் | 7000 00 | 750 00 |

குறிப்பு: ஜி. எஸ். ரி. உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2000-08-23

திரு. ரி. எம். செல்வராசா ஜே.பி.யு.எம்.
தலைவர்

(சி/12746)


## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

புதிய நிர்வாகத்தின் கீழ்,
விசேட நடைமுறைகளுடன்.....:

தரம் 3 முதல் O/L வரை

3 ஆம் தவணைக்கான புதிய வகுப்புகள்

**ஆரம்பம்: 01 - 09 - 2000** (வெள்ளி 3 மணி)

குறிப்பு;: தகுதி - அனுபவம் - திறமை வாய்ந்த ஆசிரியர்கள்

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள்

## புலமைப் பரிசில்- 2001

தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்பு

**ஆரம்பம்: 01 - 09 - 2000** (வெள்ளி 3.00 மணி)

ஒவ்வொரு ஞாயிறும் மாதிரிப் பரீட்சை நடைபெறும்.

(77826)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி. வ. பத்மநாதன்

அவர்களின் தந்தையார்

**அமரர் சி. இரத்தினம்** அவர்களின்

மறைவையொட்டி, எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை
யா/கு நம்பசிட்டி பொன்
பரமானந்தர் ம. வி.

(77822)

## மரண அறிவித்தல்

### திருவடி திருக்குமரன்

போயிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கீரிமலையில் வாழ்ந்து வரும் தற்போது சுன்னாகத்தில் வசிப்பவருமாகிய திருவடி திருக்குமரன் நேற்று (29-08-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நடுவிலார் திருவடி, காலஞ்சென்ற திருவடி பரஞ்சோதி ஆகியோரின் மூத்த மகனும் திருமார்வனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-08-2000) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;-
ந. திருவடி
(தந்தை)

ஆறுமுகம் வீதி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(77827)


## லங்கா சிமெந்து நிறுவன கொங்கிறீற் உற்பத்திப் பொருள்கள் விற்றுத் தீர்த்தல்

கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகிலுள்ள கிறீஸ்தவ தேவாலயத்துக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் முதலி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள தொழிற்சாலையில் சகல உற்பத்திப் பொருள்களும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

| பொருள்கள் | பழைய விலை | குறைந்த விலை |
|---|---|---|
| கொங்கிறீற் கற்கள் | | |
| I-12''X6'X4' | 21.00 | 17.50 |
| II-12''X6'X4' | 19.00 | 16.00 |
| வேலித் தூண் | | |
| 5'X0'' | 400.00 | 250.00 |
| 5'X9'' | 450 00 | 300.00 |
| 7'X0'' | 500.00 | 400 00 |
| வீட்டுத் தூண் | | |
| 10' | 750.00 | 600.00 |
| 08' | 700.00 | 500.00 |

பூச்சாடிகள், பூக்கற்கள் குறைந்த விலையில் உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:-

லங்கா சிமெந்து நிறுவனம்,
சிமெந்து விற்பனை நிலையம்,
திருப்பதி, கே. கே. எஸ். வீதி,
இணுவில், சுன்னாகம்.

(சி/12743)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

"நாகஜோதி" அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த மதனகரேந்திரன் சுதாகரன என்பவரது தேசிய அ. அட்டை (801622631v) முடமாவடிக்கும திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (77781)

கோப்பாய் தெற்கு கோப்பாயைச் சேர்ந்த நித்தியானந்தன் விஜியகுமாரி ஆகிய எனது தேசிய அ. அட்டை (755684880v) விசேட அ. அட்டை என்பன யாழ்ப்பாணத்துக்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இருபாலைச் சந்தியிலுள்ள டெனி கூல் பாரில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (77799)

பத்திநாதர் மேரிலொ்ஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.755942979v) வி.அ.அ என்பன ஆனைக்கோட்டைக்கும யாழ்ப்பாணத்துக்கும் இடையில தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள BOSECO. 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம் அல்லது லிங்கன் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (77779)

05 ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி, உடுவிலைச் சேர்ந்த கமலநாதன் பரந்தாமன் என்பவருடைய பாடசாலை அடையாள அட்டை (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி) மருதனார்மடம், டச்றோட் ஊடாக, சங்கானை வீதிக்கிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கதிர் ஸ்ரோர்ஸ், மருதனார் மடம் அல்லது ரட்ணம் ஸ்ரோர்ஸ், டச்றோட், உடுவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77804)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த 40 வயது நிரம்பிய அழகான படித்த பெண்ணுக்கு 47 வயதுக்குட்பட்ட விவாகமாகாத மணமகன் தேவை. உத்தியோகத்தில உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நட்சத்திரம் சித்திரை 3ஆமபாதம், தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: 383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (77775)

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது நிரம்பிய படித்த பெண்ணுக்கு 40 வயதுக்குட்பட்ட விவாகமாகாத மணமகன் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நட்சத்திரம் மிருகசீரிடம் 2ஆம் பாதம், தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: 383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (77774)

## இறைச்சிக்கோழி

சேவல், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (77644)

## விற்பனைக்கு

**SONY 27" T.V** குளிர்சாதனப் பெட்டி (**SINGER DOUBLE DOOR**) புதிய **KEN WOOD (MAJAV)** சகல உபகரணங்களுடன் **YAMAHA GENERATOR 2000 KV, 650KV Cane baby cot, pantry WALL CUB BOARD** மற்றும் வீட்டுத் தளபாடப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 52B, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். **T.P.** 2549 (77778)

ஆண் அல்ஷேசன் நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு செ. ஜெயக்குமார் (பாபு), பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை. (77806)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/- தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/12579)

## நாய்க்குட்டி விற்பனை

Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (77801)

## மலிவு விற்பனை

**T.V SONY** (கலர 21 இஞ்சி, அன்ரனா) வீட்டுத்தளபாடங்கள், மின்விசிறிகள், மேசைகள், கோழிக்கூடு, தையல்மெசின், தகரம், அலுமாரிகள், கட்டில்கள் முதலியன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 59, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (77777)

## வேலையாள் தேவை

சமையல் வேலை செய்து பூந்தோட்டத்தைப் பராமரிக்கக் கூடிய பெண் வேலையாள் தேவை. தங்குமிட வசதியுண்டு. நேரில் வரவும். தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர் (77800)

## ENGLISH SPOKEN AND GRAMMAR

**By: BRITTO**

(புதிய பிரிவு)

**ஆரம்பம்: 02-09-2000**

மாலை 4.30 (பழைய நேரம்)

*சனி, ஞாயிறு*

இடம்: **கொக்குவில்**

(ஞான பண்டிதர் பாடசாலைக்கு அருகில்)

(C/12703)

## SALES CENTRE

உங்களுக்குத் தேவையான பொருள்களை நியாயமான விலைக்கு வாங்கவும் விற்கவும் தொடர்பு கொள்ளுங்கள்

## ஆனந்தி

**கே. கே. எஸ் வீதி, துர்க்காபுரம்.**

**வாகனங்கள், வீட்டுப்பாவனைப் பொருள்கள், தளபாடங்கள், இயந்திர வகைகள், கூரை ஒடுகள், மரங்கள், வீடு, காணி முதலியன.**

*தரமான சிற்பங்கள், ஓவியங்கள், அவை சார்ந்த புத்தகங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்கின்றோம்.*

### தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் / தொலைபேசி இயக்குநர் } பெண்கள்

தொலைபேசி இல: 212817

(77797)

## அறியத்தருகின்றோம்

அரியாலை தபாற்கட்டைச் சந்தி அருகில் இயங்கிவந்த **"மயூரி தையலகம்"** தற்காலிகமாக வேற்கைப் பிள்ளையார் கோயில், லோட்டன் வீதி, நவாலி மானிப்பாயில் இயங்கி வருகின்றது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(77771) *- தையலகத்தினர்*

தென்மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

வருடாந்தப் பொதுக்கூட்டம் *16-09-2000*

02-09-2000 ஆம் திகதி நடைபெற இருந்த எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 16-09-2000 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதம சங்கமண்டபத்தில் சங்கத்தலைவர் தலைமையில் நடைபெறும். ஆகவே தயவு செய்து தவறாது கூட்டத்தில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். நிகழ்ச்சி நிரல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொ. கனகராசா
தலைவர்.
*தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச.*
*கொடிகாமம்.*

(C/12741)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**நல்லூர் - கந்தர்மடத்தைச் சேர்ந்த**
**நிமலன் ~ செல்வமதி தம்பதிகளின்**
**செல்வப்புதல்வி**



## செல்வி தேனுகா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (30-08-2000) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

**இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், சித்தப்பாமார், கனடாவில் வசிக்கும் பெரியத்தை குடும்பம், சின்னத்தை குடும்பம், விளானில் வசிக்கும் பெரியம்மா குடும்பம், பெரியமாமா குடும்பம், சின்னமாமா குடும்பம், குட்டிமாமா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.**

**பெற்றோர்**

*கந்தர்மடம்*
*யாழ்ப்பாணம்.*

(77717)

## மாணவர் விவரம் பெறுதல்
## யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

**சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் 2000 ஆம் ஆண்டில் கல்வி கற்று வந்த மாணவர்களின் விவரம் திரட்டப்படுகிறது.**

* இது இடம்பெயர்ந்துள்ள மாணவர்களின் தகவல்களைப பெறுவதற்காகவும், அவர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்குவதற்காகவுமானது.
* இதற்கான படிவங்களை பின்வரும் இடங்களிலிருந்து மாணவர்/பெற்றோர் பெற்றுப் பூரணப்படுத்தி 06-09-2000 புதன் கிழமைக்கு முன் சமர்ப்பிக்கவும்.

i) *யா/டிறிபேக்கல்லூரி (நிரு கல்வி நிலையம்) கோண்டாவில்.*

ii) *திருமதி பவானி ஜெயராசா, நெல்லியடி மத்திய மகாவித்தியாலம்.*

குறிப்பு:

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் 1999/2000 ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள் தமது முகவரியைத் தயவு செய்து தரவும்.

(77776) **அதிபர்.**

உ
சிவமயம் ஓம் ஸ்ரீசாயிராம்

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 15 ஆம் நாள் (31-08-2000) துதியைத் திதியும் உத்தர நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய காலை 10.45 மணி முதல் 12.16 மணி வரை உள்ள கன்னிலக்கின சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **செழியன்** | **பத்மினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

கொழும்பு வெள்ளவத்தை மயூராபதி அம்மன் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

**திருமதி யோ. இராசலிங்கம் குடும்பத்தினர்,**
**திரு. திருமதி ச. சிவலோகநாதன்,**
**திரு. திருமதி செ. தர்மலிங்கம்**
*37, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*

இருவீட்டார் அழைப்பு

**திரு. திருமதி ச.சொர்ணலிங்கம்,**
*4, கோபால் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(77786)

பதவி உயர்வு வழங்குவதற்கு முன்னர்

# பொலீஸ் அதிகாரிகளின் மனித உரிமை நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு!

கொழும்பு,ஓக.30

பொலீஸ் உயர்மட்டத்தில் வழங்கப்படவுள்ள பதவி உயர்வுகளுக்காக 40 இற்கும் மேற்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் குறித்த மனித உரிமை நடவடிக்கைகள் தொடர்பாகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இந்தப் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளதால் இது குறித்து பொலீஸ் உயர்மட்டம் தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கையை அதிகரிக்க வேண்டிய நிலையில் அண்மையில் தேர்தல் வன்முறைகளில் மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதால் அரசிற்கு எதிரான விமர்சனங்களைத் தணிக்கும் ஒரு நடவடிக்கையாகவே மேற்படி பதவி உயர்வுகளை வழங்கும் போது மனித உரிமைகள் விடயங்களில் நன்மதிப்பைப் பெற்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டிய நிலையில் அரசு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

புதிதாகப் 10பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி)பதவிகளுக்கும், 30 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி) பதவிகளுக்கும் வெற்றிடங்கள் இருப்பதாகவும், இவை எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் நிரப்பப்படவுள்ளதாகவும் பொலீஸ்திணைக்களத்தின் பொதுமக்கள் தொடர்புப் பிரிவு பொறுப்பதிகாரியும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருமான ரியன்ஸி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவி வெற்றிடங்களுக்கு 50 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களிடமிருந்தும் 150 தலைமைப்பொலீஸ் அதிகாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## வாழ்த்துகின்றோம்

இல்வாழ்வில் இணையும்
எமது செயற்குழு உறுப்பினர்
திரு.ப.மோகனராஜன்
செல்வி கா.மகிழினி
தம்பதியினரை பதினாறும் பெற்று பெருவாழ்வு
வாழ வாழ்த்துகிறோம்.

யா/கோப்பாய்
கிறிஸ்தவ கல்லூரி

- பழையமாணவர் சங்கம்

(77823)


## தென்மராட்சி பிரதேச செயலகம் இணுவிலில் திறப்பு

தற்காலிகமாகக் கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வந்த தென்மராட்சிப் பிரதேச செயலர் அலுவலகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இணுவிலில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலகம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையினால் சம்பிரதாயபூர்வமாக இணுவில் மகலிவூட வைத்தியசாலையில் உள்ள வீரகத்திப்பிள்ளை மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

தமது பகுதிக்குரிய அலுவல்கள் யாவும் இங்கு நடைபெறும் எனப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

# சங்கிலி அறுக்க முனைந்த பெண் வகையாக மாட்டினார்

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வெளிவீதியில் - பின்புறத்தில் - நேற்று மாலை 5மணியளவில் ஐந்து வயதுச்சிறுமி ஒருவரின் சங்கிலியை அறுக்க முயன்றதாகக் கூறப்படும் பெண் ஒருவர் மக்கள் நலன்புரிச்சங்கத்தின் விசேட பெண் பிரிவினரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

நல்லூர் மருதடியைச் சேர்ந்த 58 வயது நிரம்பிய அந்தப் பெண் மாநகரசபை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இன்று இடம்பெறும் பூங்காவனத் திருவிழாவின் போது களவுகள் இடம்பெறக்கூடும் என்பதால் அவதானமாக இருக்குமாறு பக்தர்களை மக்கள் நலன்புரிச்சங்கம் கேட்டுள்ளது. (இ-3)

## சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.30

பருத்தித்துறை உதைபந்தாட்டச்சங்கத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

# தமிழர்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைகள் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டு வடக்கு-கிழக்கு மக்கள் தங்களுடைய நிர்வாகத்தினை தாங்களே நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணம் பிரிக்கப்படுவதை எமது கட்சி ஏற்றுக் கொள்ளமாட்டாது.

மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் ஆகியவற்றில் வாழ்கின்ற மலையக மக்களுக்கு சுயாட்சி உள்ளமைப்பு வழங்கப்படவேண்டும்.

முஸ்லிம்கள் மதரீதியில், கலாசார ரீதியில் ஒரு தேசிய இனக்குழு என்பதால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அவர்களுடைய தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும்.

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கீழ் அதன் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டாலும் யாழ். மாவட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் பொறுப்பில்தான் நாம் மக்கள் முன் நிற்கின்றோம்.

எமது கட்சியைப் பொறுத்தவரையில் நாம் 1960 களிலிருந்து தோழர் சண்முகதாசன் தலைமையில் பல தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டவர்கள்.

ஆரம்பத்தில் முதலாளித்துவ நாடாளுமன்றத் தேர்தல்களை பகிஷ்கரித்து வந்தோம். புதிய ஜனநாயகக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தலை எமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான களமாகப் பாவித்தோம்.

நுவரெலியா மாநகரசபை தேர்தலிலும் மற்றும் கொழும்பு மாகாணசபைத் தேர்தலிலும் எமது கட்சி போட்டியிட்டது.

உடனடியாக யுத்தம் நிறுத்தப்படவேண்டும், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும், இயல்பு வாழ்க்கை திரும்பவேண்டும், ஜனநாயக மனித உரிமைகள் நிலைநிறுத்தப்படவேண்டும் ஆகியவற்றினை எமது தேர்தல் விஞ்ஞாபனமாக மக்கள் முன் வைத்துள்ளோம்.

வடக்குத் தமிழர்கள் பேரினவாத அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள், இரத்தம் சிந்தும் துயர வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை மாற்ற வேண்டும். நாம் கொழும்பிலிருந்து தேர்தலுக்காக ஓடி வந்தவர்கள் அல்ல. வடபகுதியில் 36 வருடங்களாக இடதுசாரி மாக்ஸிய லெனினிய வழியில் நின்று போராட்டம் நடத்தியவர்கள்.

வடக்கு-கிழக்கில் யாழ். மாவட்டத்தில் மட்டும் தான் நாம் போட்டியிடுகின்றோம். திருகோணமலையில் போட்டியிடுவது பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த நான்கு வருடங்களாக தோழமை இயக்கங்களுடன் இணைந்து சிங்களக் கிராமங்களில் யுத்தத்துக்கு எதிராக பிரசாரம் செய்து வருகிறோம். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களின் போராட்டம் பின்னடைவதையோ அல்லது பலவீனமடைவதையோ எமது கட்சி ஏற்றுக் கொள்ளமாட்டாது.

இப்படி அவர் கூறினார்.

சோ.தேவராசா பேசுகையில் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பரந்துபட்ட யுத்த எதிர்ப்பாளரின் ஆதரவைப் பலப்படுத்துதல் என்ற அடிப்படையில் இலங்கையிலுள்ள இடதுசாரிக் கட்சிகளுடன் ஐக்கியப்பட்டுள்ளோம்.

இந்தத் தேர்தலில் நாடாளுமன்ற ஆசனம் எமது கட்சிக்குக் கிடைக்குமாக இருந்தால் எமது புதிய ஜனநாயகக் கட்சி ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கட்டுப்பாடின்றி சுயமாகச் செயற்படும்.

இதற்கான ஒப்பந்தத்தை ஜனநாயக இடதுசாரி முன்னணியுடன் செய்து வாக்குறுதியையும் பெற்றுள்ளோம்.- என்றார்

க.தேவதாசன் கருத்துத் தெரிவிக்கையில் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் இலவசக்கல்வி, இலவச வைத்தியம் உட்பட மானிய முறைகள் அனைத்தும் நிறுத்தப்படவுள்ளன. இந்த உதவிகள் நிறுத்தப்பட்டால் இலங்கை முழுவதிலும் பெரும் வறுமைநிலை ஏற்படும். இதற்கு எதிராக எமது கட்சி போராட்டம் நடத்தும் - என்றார்.


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித்திங்கள்
16ம் நாள் வெள்ளிக்கிழமை (01.09.2000)
மு.ப. 7.20 முதல் 9.15 வரை உள்ள கன்னி
லக்கினத்தில் அமைந்த சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புதல்வன்
திருநிறை செல்வன்
கோபிநாத்
அவர்களுக்கும்



எமது ஏக புதல்வி
திருநிறை செல்வி
துஷீத்தா
அவர்களுக்கும்

நயினை நாகபூசணி அம்மன் திருவருள் துணை கொண்டு
திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம், தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் பங்கு
கொண்டு சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

இடம் : மியாமி மண்டபம் (அலெக்சான்றா பிளேஸ்,வெள்ளவத்தை, கொழும்பு 06.)

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

*Dr.சி.தங்கவேல் குடும்பம்,*
*38. இராஜசிங்க வீதி.*
*வெள்ளவத்தை, கொழும்பு 06.*

*செ.சேனாதிராஜா குடும்பம்,*
*89/5, பஸல்ஸ் லேன்,*
*வெள்ளவத்தை, கொழும்பு 06.*

உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ் அழைப்பை
நேரடி அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.


(77803)



'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

நெல்லியடியில் இன்று!





மங்களகரமான

## புதுக்கடை திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் விக்கிரம வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் இன்று (30-08-2000) புதன்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.48 மணிவரையிலான சுபவேளையில்

## வைஷ்ணவி நகைப் பூங்கா
## Vysnavi Nagai Poonka

என்னும் எமது புதிய ஸ்தாபனத்தை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு

மாலுசந்தியில் இயங்கி வந்த 'கண்ணன் தங்க நகை வாணிபம்' என்ற வியாபார நிலையமே தற்போது நெல்லியடியில் வைஷ்ணவி நகைப் பூங்கா என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

(C/12744)

*பிரதான வீதி (பஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி.*

*தங்கள் நல்வரவை நாடும்:* கோ.கண்ணதாசன்

# பொதுக் கூட்டங்களுக்கு ஜனாதிபதி வரமாட்டார்!

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி சந்திரிகா பொதுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

"ஜனாதிபதி பொதுக்கூட்டங்களுக்குச் சமுகமளிக்கமாட்டார். சுதந்திரக்கட்சியின் மாவட்ட மாநாடுகளில் மட்டுமே பங்குபற்றுவார். பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி பங்குபற்றாவிட்டாலும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஜனாதிபதி சார்பில் சகல கூட்டங்களிலும் பங்குபற்றுவார் என அறிவிக்கப்படுகிறது.

ஐந்து மாவட்டங்களில் நடைபெறும் மாநாடுகளில் மட்டும் ஜனாதிபதி பங்குபற்றுவார் என்றும்-

அவை நடைபெறும் திகதிகள், இடங்கள், நேரங்கள் என்பன முன்கூட்டியே அறிவிக்கப்படமாட்டா என்றும்-தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## பம்பலப்பிட்டியில் கிரனேட் வீச்சு

கொழும்பு,ஓக.30

பம்பலப்பிட்டி டிக்மன்ஸ் சந்தி பொலீஸ் சோதனைச்சாவடி மீது நேற்றுப்பிற்பகல் 1.45 மணியளவில் கிரனேட்வீச்சு நடத்தப்பட்டது.

இதில் வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், மற்றொரு பொலீஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சோதனைச் சாவடியில் வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் அந்த வழியால் வந்த ஓட்டோ ஒன்றை சோதனைக்காக நிறுத்துமாறு கோரினர் எனவும்-

அப்போது ஓட்டோவில் இருந்தவர்கள் பொலீஸார் மீது கிரனேட்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர் எனவும்- கூறப்பட்டது.

ஓட்டோவில் சென்றவர்கள் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இதே வேளை மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுப்பிற்பகல் பம்பலப்பிட்டிப் பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது. (இ-7-6)

## மோதல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியில் பங்கர்கள் அமைத்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் இரு புலி உறுப்பினர்களும் -

நாகர்கோயிலில் அன்று மாலை இடம் பெற்ற சண்டையில் இரு புலி உறுப்பினர்களும் -

முகமாலைப்பகுதியில் அன்று காலை 11 மணிக்கு இடம்பெற்ற சண்டையில் இரு புலி உறுப்பினர்களும் - உயிரிழந்துள்ளதாக அது மேலும் தெரிவித்தது. (இ-க-3)

## சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான கவுறுவெலவுக்கு கடந்த புதனன்று விறகு வெட்டச் சென்ற சமயம் காணாமற்போன 4 தமிழர்களில் இருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டனர்.

உ.துரைராஜாசிங்கம் (வயது 44-கரடியனாறு) ம.சுப்பிரமணியம் வயது 36 கரடியனாறு) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

# பொ.ஐ.மு.வுடன் இணைந்து சிறிமானி கட்சி போட்டி!

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து தமது அணி போட்டியிடவிருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு)யின் தலைவி சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

நாடு இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு மட்டுமே உள்ளதால் இந்த முடிவைத் தமது அணி எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

வேட்பாளர் பட்டியல் இன்னமும் தயாரிக்கப்படவில்லை என்றும்

அது தொடர்பாகச் செயற்குழு ஆராய்ந்து வருகின்றது என்றும்- அவர் மேலும் சொன்னார்.

(இ-க-3)


# வாழ்த்துகின்றேன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால்
அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட
நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற
நண்பன் **அராலியூர் சுந்தரம்பிள்ளை**
அவர்களையும்
இரண்டாம் இடத்தைப் பெற்ற மேலதிக மாகாணக்
கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த
நண்பன் **பா.சிவபாலன்**
அவர்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

நண்பன்
செ.மெற்றாஸ்மயில்.

(C/12734)

# D.C.M

**Degree college of Commerce and Management studies**

நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
(பொருளியற் கல்லூரியில்)
யாழ்.,பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி)

**G.A.Q .,I St in Com -2001**

சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம் 02.09.2000 சனி 11.00 (ப.நே)
S.வரதராஜன் B.A. (Hons)

இயக்குநர்
D.C.M

(77764)

# BRIGHTMAN கல்வி நிலையம்

(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண்றோட், யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

BY: GRAMMAR KING **M.A.HARI**
B.A. Dip.in Eng.

ஆரம்பம்:- 01.09.2000 FRI. 3.00 p.m
(மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்)

(C/12731)

# இலக்கியக் கட்டுரைகள்

2000ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற
பாடத்திட்டத்திற்கு அமைய

★ க.பொ.த சாதாரண தர மாணவர்கள்
தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் கற்கவும்

★ க.பொ.த. உயர்தர மாணவர்கள்
தமிழ்மொழி கற்கவும்

உதவக்கூடிய 38 கட்டுரைகள்,
300 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய

**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின்**

பதினொராவது நூல்

**150 பக்கங்கள் - விலை ரூபா 125.00**

(77739)

# யாழ் பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.

பொருளியல்
S.வரதராஜன்

A/L 2002
தேசிய வருமானம்

பிரிவு I சனி, ஞாயிறு 7.30 - 8.30 a.m
02.09.2000 சனி

பிரிவு II புதன், வெள்ளி 3.30 - 4.30 p.m
01.09.2000 வெள்ளி

(77725)

# எமது புதிய வீடியோ CD வெளியீடு

சத்தியராஜ், குஷ்புவின்
※ உன்னைக் கண் தேடுதே

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(C/12749)

# இன்றைய வீடியோ CD வெளியீடு

★ உன்னைக் கண் தேடுதே
★ கண் திறந்து பாரம்மா
★ வெற்றிக் கொடி கட்டு
(ஒரிஜினல்)

**மூர்த்தி வீடியோ சென்ரர்**
மானிப்பாய்.
(C/12750)

# புலமைப்பரிசில் வகுப்புகள்

*(After A/L Batch)*

எமது நிறுவனத்தால் நடத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி பதிவுகளை மேற்கொண்டோருக்கான வகுப்புகள் (02/09/2K) சனிக்கிழமையன்று ஆரம்பமாகும். பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் (31.08.2K) வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு ஆரம்பமாகும் புதிய பிரிவுகளில் இணைந்து கொள்ளவும்.

எமது நிறுவன புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றாமல் தற்போது ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைய விரும்புபவர்களுக்கு *பயிற்சிக் கட்டணத்தில் 75% சதவீத கட்டண சலுகை* வழங்கப்படவிருக்கின்றது. மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இப்பிரிவில் ஆரம்பமாகவுள்ள பயிற்சி நெறிகள்:-

## DIPLOMA IN OFFICE MANAGEMENT

course I — Duration: 6 Months

| | |
|---|---|
| Ms Excel | Ms Word |
| Ms Access | Ms Power Point |
| Internet & E-mail | Data Capture |
| Data processing | Data Organization |
| Classification Of computer | |
| Information Processing & Analysis | |

## DIPLOMA IN OFFICE MANAGEMENT & DESK TOP PUBLISHING

courseII — Duration: 9 Months

| | |
|---|---|
| Page Maker | Ms Photo Draw |
| Ms Publisher | Ms Binder |
| Ms Express | Ms Word |
| Ms Excel | Ms Access |
| Ms Power Point | Data Capture |
| Ms Page Front | Data processing |
| Data Organization | Classification of computer |

## DIPLOMA IN INFORMATION & COMMUNICATION TECHNOLOGY

courseIII — Duration: 12 Months

| | |
|---|---|
| C++ | Fox Pro |
| Windows NT | HTML Programming |
| Ms Word | Ms Excel |
| Ms Access | Ms Power Point |
| Internet & E- mail | Data Capture |
| Data Processing | Data Organization |
| Basic Hardware Engineering | Classification Of computer |
| Information Processing & Analysis | |
| Data Communication Concept | |
| Programming Design & Development | |
| Software Engineering Introduction | |

## DCS - FOR THE NEXT GENERATION INFORMATION TECHNOLOGY NEEDS

**DCS**
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
(British ACP Recognized Training centre)
(Reg.No N(PVS) 13073)
T.P NO.021-2596 E- mail: dcsjaf@sltnet.lk

124/2,Palaly Road, Thirunelvely. — N. M. M. V. Road, Nelliaddy.

(C/12734)

இரத்தம் தோய்ந்த நிலத்தில் நடக்கின்றோம்,
நித்தம் இதுதான் எங்கள் வாழ்வோ?
யுத்தம் நீங்கி, நிம்மதியாக வாழ
அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கே!
(ஈ.பி.டி.பி)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

(C/12747)

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களது பெரும் முயற்சியினால் நவீன வசதிகளுடன் புதிய யாழ்பிரதம தபால் அலுவலகத்தை 8 கோடி செலவில் அமைக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.